விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

*சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 27 புதன்கிழமை (11.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023*

## அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கம்
# கால வீணடிப்பின்றி செயற்பட வேண்டும்!
## இரா.சம்பந்தன் வலியுறுத்து



(கொழும்பு)

இந்த நாட்டில் மற்ற சமூகங்களை போல் நாமும் எல்லா உரிமைகளும் பெற்றவர்களாக சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்ற விடயங்களை எதிர்பார்த்தே கடந்த கால ஆட்சியை மாற்றி அமைக்க எமது மக்கள் தமது வாக்குகளை வழங்கினார்கள் என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அரசியல் தீர்வு விடயத்தில் அரசாங்கம் காலத்தை வீணடிக்காது செயற்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

(23-ம் பக்.)

## ரவிராஜ் கொலை தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு!

(கொழும்பு)

படுகொலைசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் நேற்று காலை மேன்முறையீட்டு மனுவொன்று தாக்கல் செய்

23ஆம் பக்கம் பார்க்க....

## பனைவள அபிவிருத்தி ஆண்டாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பனைவள அபிவிருத்தி ஆண்டாக இந்த வருடத்தை வடக்கு மாகாண சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 82 ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் மேற்படி விட

23ஆம் பக்கம் பார்க்க....

## மண்ணெண்ணை விலை ரூ.5ஆல் குறைப்பு!

(கொழும்பு)

ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதியவிலை 44 ரூபாயாக விற்கப்படவுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## பட்டிப் பொங்கலன்று இறைச்சிக்கடை பூட்டு


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் அனைத்தையும் எதிர்வரும் 15-ம் திகதி பட்டிப் பொங்கல் தினம் மூடுமாறு உத்தர விடப்பட்டு, வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைக்கு யாழ்.போதனாவில் தடை விதிப்பு
### வைத்தியசாலை பணிப்பாளர் விசேட அறிவித்தல்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் மற்றும் உணவு பொதி செய்வதற்கான லன்ஞ் சீற் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது என வைத்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆசிரியர்களின் போராட்டத்தை மீறி வெளியேற முற்பட்ட செயலாளர்
### சம்பவத்தால் பதற்றம்: ஆசிரியர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் போராட்டத்தினை மீறி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தை விட்டு வெளியேற முற்பட்டதனால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டதுடன் ஆசிரியர் ஒருவரும் காயமடைந்தார்.

நியமனத்தின் பிரகாரம் இடமாற்றத்தினை வழங்கக்கோரி வெளிமாவட்டங்களில் 5 வருடங்களை பூர்த்தி செய்த சேவையில் உள்ள ஆசிரியர்கள் நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தின் முன் காலவரையறையற்ற கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

இன்றைய வலம்புரியுடன்...
தெய்வீகமணம் கமழும் வர்ணக்கலண்டர்


தவறாது பெற்றுக்கொள்ளுங்கள்

## விமல் வீரவன்ஸ நேற்று கைது; 24-ம் திகதிவரை விளக்கமறியல்



(கொழும்பு)

பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினரால் நேற்றைய தினம் முன்னாள் வீடமைப்புத்துறை அமைச்சரும், ஒன்றிணைந்த எதிர்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதிமோசடிப் பிரிவில் நேற்று காலை முன்னிலையாகி சாட்சியமளித்த நிலையில் நாடாளு

23ஆம் பக்கம் பார்க்க....

## அதிபர்களின் சத்தியக்கடதாசி அவைத்தலைவர் பதில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்குள் உள்வாங்குவதற்கான நியாயமான காரணங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், இதனை மாகாண சபையின் அமைச்சரவையால் செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது முதலாவது விடயமாக **வலம்புரி** பத்திரிகையில் தொடராக வெளிவந்து கொண்டிருக்கும் கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி எனும் கட்டுரையில் வந்த விடயம் ஒன்றை சுட்டிக்காட்டிய அவைத்தலைவர், பொறுப்பு வாய்ந்த பத்திரிகையில் வெளிவந்த விடயம் என்பதனால் அது தொடர்பில் தெளிவு படுத்த வேண்டிய கடப்பாடு மாகாண சபைக்கு உண்டு எனக் கூறி,

23ஆம் பக்கம் பார்க்க....

பயமின்றி
கனவு
காணுங்கள்
2016 ஆம் ஆண்டில் கமநலம் கோடீஸ்வரர்கள்
11 பேர்

NLB
உங்களை வெற்றியாளராக்கும் இன்றைய சுப்பர் பரிசு
ரூபா. 59,355,795.13
தொடர்ச்சியாக கோடீஸ்வரர்களை உருவாக்கும்
கமநலம்
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
NATIONAL LOTTERIES BOARD
www.nlb.lk
(049)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392 (C-7181)

## பெயர் மாற்றம்

பாடசாலை வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட கலாரூபன் டயன்சன் ஆகிய எனது பெயரை **கலாரூபன் அர்ஷன்** என மாற்றம் செய்து இன்றிலிருந்து என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என அனைவருக்கும் இத்தால் அறியத் தருகின்றேன். (7466)

# ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சிறந்த நிதியமைச்சராக ரவி



(கொழும்பு)

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இந்த ஆண்டுக்கான நிதியமைச்சராக இலங்கையின் நிதியமைசசர் ரவி கருணாநாயக்க தெரிவாகியுள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் த பேங்கர் என்ற சஞ்சிகை இந்த தெரிவை அறிவித்துள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 1.5 பில்லியன நிதியைப் பெற்றமை, நிலுவைக் கொடுப்பனவு பிரச்சினைக்கு தீர்வுக் கண்டமை மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக் கையை ஏற்படுத்தியமை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டே இந்த தெரிவு மேற்கொள் எப் பட்டுள்ளது. (இ-3)

## கோழி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் (கல்பேட்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன், நல்லூர் (C-7177)

## தேவை

திருநெல்வேலியிலுள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதிக்கு சமையல் வேலை செய்ய ஆண்/ பெண் வேலையாள் தேவை. (7468)

தொடர்பு
021 222 2478, 077 953 0496

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்றைய தினம் 10.01.2017 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற, பட்டமளிப்பு நிகழ்வில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற கிளி.சிவன்சோலை சிவநகரில் வசிக்கும்

செல்வி
**தருமலிங்கம் துவாரகா**




அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புப்பெற வாழ்த்துகின்றோம்.

இல.79, சிவன் வீதி, உருத்திரபுரம்.

வாழ்த்துவோர்:
வே. தருமலிங்கம் குடும்பத்தினர் (C-7187)

பாராட்டி வாழ்த்துகின்றோம்






Sivasubramaniyam Prathap
(BBA (Hons) special in finance.
Bachelor of business administration)

யாழ்.பல்கலைக்கழக 32ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் நேற்றையதினம் (10.01.2017) தொழில் நிர்வாகமாணி (நிதியியல், சிறப்பு) பட்டத்தையும் சகல துறை சாதனையாளருக்கான பேராசிரியர் துரைராஜா விருதுகள் முகாமைத்துவ வணிக பீடம், பல்கலைக்கழக மட்டம் ஆகிய இரண்டு தங்கப்பதக்கங்களையும் பெற்றுக்கொண்ட எமது நண்பன்

**சிவசுப்பிரமணியம் பிரதாப்**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- நண்பர்கள் (C-7189)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

K-AIMS BUSINESS SCHOOL
Knowledge with aims

ACCA - UK யினால் யாழ்ப்பாணத்தில் GOLD Approval வழங்க பெற்ற ஒரே ஒரு நிறுவனம்.

# A/L பெறுபேறுகளின் பின்னர்

உங்கள் பிள்ளைகளை K-AIMS BUSINESS SCHOOL இல் இணைப்பதன் மூலம் ACCA-UK உயர் தொழில்சார் கணக்கியல் கற்கை நெறியின் 3 நிலைகளையும் 2-½ வருடத்தில் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

**Diploma** in Accountants in Business ➡ **Bsc (Hons)** in Applied Accounting Oxford Brookes University-UK ➡ **ACCA** Association of Chartered Certified Accountants-**UK**

உயர்தரத்தில் உங்கள் பெறுபேறுகளின் மாவட்ட ரீதியான தரப்படுத்தல்களிற்கேற்ப விசேட சலுகைகள் வழங்கப்படும்.

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்

Knowledge level (Diploma) – 21st Jan 2017
Skill Level – 21st Jan 2017

FREE English Classes

(C-7184)


COLOMBO
#35-1/1 Upatissa Road, Bampalapitiya
0770 780 678

JAFFNA
#59 Point Pedro Road, Ariyakulam
0768 268 206

# நான் சிறைக்குச் செல்ல அஞ்சப் போவதில்லை

## நாமல் ராஜபக்ஷ வீராப்பு

(கொழும்பு)



சிறைக்குச் செல்ல அஞ்சப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டு மக்களுக்காகவே நாம் சிறைக்கு செல்கின்றோம். எம்மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினாலும் பிரச்சினையில்லை.

அம்பாந்தோட்டையில் போராட்டம் நடத்தியமைக்காக பொலிஸார் எம்மை கைது செய்யவுள்ளனர். நாம் இவற்றுக்கு அஞ்சப் போவதில்லை. இந்த நாட்டுமக்களுக்காகவே நாம் சிறைக்கு செல்கின்றோம்.

எம்மீது நீர்த்தாரை தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் சவர்க்காரம் வழங்கப்படவில்லை. பொலிஸார் எம் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

மாகாணசபை உள்ளூராட்சி மன்ற அரசியல்வாதிகள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். எம்மை கைது செய்யும் வரையில் நாம் காத்திருக்கின்றோம்.

மேலும், எம்மை கைது செய்வதும் எம்மை தாக்குவதனையும் தவிர இந்த அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-3)




# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்





நியமனத்தின் பிரகாரம் இடமாற்றத்தினை வழங்கக்கோரி வெளிமாவட்டங்களில் 5 வருடங்களை பூர்த்தி செய்த சேவையில் உள்ள ஆசிரியர்கள் நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகததின் முன் காலவரையறையற்ற கவனயீர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மடு ,மன்னார்,வவுனியா வடக்கு , வவுனியா தெற்கு , துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் 5 மற்றும் 6 வருடங்களை பூர்த்தி செய்த யாழ். மாவட்டத்தை சேர்ந்த ஆசிரியர்கள் தமது வெளிமாவட்ட சேவைக்காலம் முடிந்த பின்னரும் தமக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என தெரிவித்து அதற்கு எழுத்துமூலமான உறுதிமொழியினை தருமாறு கோரி போராட்டததினை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டு வெளிமாவட்டங்களில் 250 இறகும் மேற்பட்டவர்கள் தற்போது வெளிமாவட்ட சேவைக் காலம முடிந்த பின்னரும் கடமையாற்றிக்கொண்டிருக்கிறோம.

வெளிமாவட்டத்தின் சேவைக்காலத்தினை முடித்ததன் பின்னரே இடமாற்றத்திற்காக நாம் விண்ணப்பித்திருந்த போதும் எமது இடமாற்றக்கோரிக்கை. நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருட கால இடமாற்ற சேவைக்காலத்தை பூர்த்திசெய்து ஆறாவது வருடத்திலும் காலாண்டுகளை கழித்த நிலையிலும் எமது நியமனக் கடிததத்தின்படி வெளிமாவட்டங்களில் ஐந்து வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்தும் எமது இடமாற்ற கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில், மேன் முறையீடு செய்யப்பட்டு மேன் முறையீடும் நியாயமான காரணங்களுக்கு அப்பால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாம் நியமன கடிதத்தின் படி 5 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளோம், பெண்தலைமைத்துவ குடும்பங்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர், குடும்பங்களை பிரிந்த நிலையில் மன உளைச்சலுக்குள்ளாகி வருகிறோம், எம்முடன் ஒரே காலத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தமது செல்வாக்கின் அடிப்படையில் இரண்டு வருட கால ஒப்பந்த அடிப்படையில் வெளிமாவட்ட சேவையினை பூர்த்தி செய்துள்ள போதிலும் நாங்கள் நியமன கடிதத்தின் பிரகாரம் ஐந்து வருட சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ளோம்.

மேலும் துறைசார் ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களில் இல்லாத போதும் யாழ். மாவட்டத்தில் மேலதிகமான துறைசார் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பல்வேறு இன்னல்களின் மத்தியில் நாம் எமது சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ளோம். அத்துடன் வடமாகாண கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள் பாடசாலை ஆரம்ப நேரமும் பாரிய சுமையாகவே தற்போதுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பல முறை அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்வி அமைச்சின் செயலாளரால் 2018 ஆம் ஆண்டு இடமாற்றம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட போதும் அது உறுதியானதாக இல்லை. எனவே எமக்கு எழுத்து மூலமான சரியான தீர்வினை அறிவிக்கும் வரை நாம் இப்போராட்டத்தினை தொடரவுள்ளோம் என தெரிவித்திருந்தனர்.

இப்போராட்டத்தில் முல்லைத்தீவு.கிளிநொச்சி, மடு, மன்னார், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு , துணுக்காய் ஆகிய வலயங்களை சேர்ந்த பாதிக்கப்பட்ட வெளிமாவட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-9)

# சிக்கலைத் தீர்க்க அவசரமாக அமெரிக்கா பறந்தார் கோத்த

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக அமெரிக்கா நோக்கி சென்றுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கா பயணத்தில்அவரது மனைவி அனோமா ராஜபக்ஷவும் இணைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 2.50 மணிக்கு டோஹா,கட்டார் நோக்கி பயணித்த ஈ.கே. 349 என்ற விமானத்தில் கோத்தபாய பயணித்துள்ளார்.

அமெரிக்காவில் தனது சொத்துக்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக கோத்தபாய அமெரிக்க சென்றுள்ளதாக ராஜபக்ஷ குடும்ப தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-3)

# தேர்தல் தாமதத்துக்கு நான் காரணம் இல்லை

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு



உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணய ஆணைக்குழு எதிர்வரும் 17ஆம் திகதியன்று தமது மேன்முறையீட்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

குறித்த நேரத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராகவே இருந்தது. அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பழைய முறையில் தேர்தலை நடத்தாமல் இருக்க இணங்கியிருந்தனர். எனினும் தேர்தல்கள் தாமதமானமைக்கு நான் காரணமில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில் எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கையில், அரசியல் கட்சிகளின் பரிந்துரைகளாக 56 தொழில்நுட்ப திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து எதிர்வரும் 17ஆம் திகதியன்று அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகஎல்லை நிர்ணய ஆணைக்குழுவினர் அமைச்சருக்கு அறிவித்துள்ளனர். (இ-3)

# அம்பாந்தோட்டை முதலீட்டுத்திட்டத்தை மகிந்த எதிர்ப்பதன் நோக்கம் என்ன?

## சீனா கேள்வி

அம்பாந்தோட்டை முதலீட்டுத் திட்டத்தை ஏன் மகிந்த எதிர்க்கின்றார் என சீனா கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் மகிந்தவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிந்து கொள்ள இலங்கைக்கான சீனத்தூதுவர் நேற்று மகிந்தவை சந்தித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

சீன முதலீட்டு வலயத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த எதற்காக எதிர்ப்பை வெளியிடுகின்றார் என்பது குறித்து சீனத் தூதுவர் யீ ஸியான்லியாங் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது, அம்பாந்தோட்டை பகுதியில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்குவதனை எதிர்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துளளதாக மகிந்தவின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

# ராஜபக்ஷவினர் களவாடியதாக ஒரு வழக்கு கூட இல்லையாம்

## உதய கம்மன்பில கூறுகிறார்

ராஜபக்ஷவினர் ஒரு சதத்தையேனும் களவாடினார்கள் என்பதற்கு இதுவரை ஒரு வழக்கேனும் தாக்கல் செய்யப்படவில்லை என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்த அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சராவார்.

ஆனால், ஒரு ஊடகப் பேசசாளர் வழிப்போககனைப் போன்று அரச நிகழ்வொன்றில் செயற்பட்டு ஆற்றிய உரையை நாங்கள் கண்டோம்.

அவரின் ஒரு கேள்விக்கு நாங்கள் விடை கூற விரும்புகிறோம்.

அவர் கூறுகிறார், ஊர்வலம போகும் மக்களே! சென்று ராஜபக்ஷவினரின் வீடுகளுக்கு சென்று களவாடிய பொருட்களையும் பணத்தையும் கேட்டுவாங்குங்கள் என்று.

அவருக்கு நாங்கள் கூறுவது, நீங்கள் ஜனாதிபதி தேர்தலின் போது கூறியிருந்தீர்கள், மெகா ஒப்பந்தம் பற்றி, அந்த பாரிய பொய்களுக்கு ஏமாற்றமடைந்து தான் பொதுமக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள்.

எனவே, பொதுமக்களிடம் சென்று கள்ளர்களை பிடிக்கச் சொல்ல.வேண்டாம்.

கள்ளர்களை பிடிக்கத்தான் பொதுமக்கள் உங்களுக்கு ஆணையை வழங்கினார்கள்,

ஆனால், ராஜபக்ஷவினர் களவாடினார்கள் என்பதற்கு சான்று இருந்தால் அவர்களை பிடித்து சிறையிலிடுங்கள், இதை பொதுமக்களிடம் சென்று அறை கூவல் விடுக்க வேண்டாம்.

எனவே அவ்வாறான எந்தவொரு களவையும் கடந்த இரண்டு வருடங்களில் பிடிக்க முடியாமல் போனமைதான் உண்மையான விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-3)

### நிரந்தர நியமனம்கோரி வடக்குசபையின் முன்னால்

# கடமை நிறைவேற்று அதிபர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் வடக்கு மாகாண சபையின் முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர். வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது அமர்வு நேற்றைய தினம் இடம் பெற்றிருந்த நிலையிலேயே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




முன்னதாக காலை 9 மணியளவில் மாகாண சபையின் முன்பாக ஒன்றுகூடிய கடமைநிறைவேற்று அதிபர்கள் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது வடக்கு மாகாண மீன்பிடி போககுவரத்து அமைச்சர் ப.டெனிஸ்வரன், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், விந்தன் கனகரத்தினம் உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

நாங்கள் வயதிலும் கூடியவர்களாக இருக்கின்றோம். தற்பொழுது அதிபர் தர பரீட்சையில் மிகவும் இளமையானவர்களும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். நாங்கள் பல வருட அனுபவங்களை பெற்றவர்கள். எனினும் தற்போது கடமை நிறைவேற்று அதிபர் பதவியிலிருந்து நீக்கியுள்ளனர். இந்நிலையில் எங்களை அந்த பதவியிலிருந்து விலத்துவதை நாங்கள் ஏற்க மாட்டோம்.

இதன்போது உறுப்பினர் சிவாஜிலிங்கம் மதிய உணவு இடைவேளையில் பதில் முதலமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரை சந்திப்பதற்கான ஏற்பாட்டினை செய்து தருவதாக கூறினார். இதற்கமைய மதிய உணவு இடைவேளையின் போது போராட்டத்தில் ஈடுபட்ட கடமை நிறைவேற்று அதிபர்களின் பிரதிநிதிகளுக்கும் வட மாகாண பதில் முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் சந்திப்பு ஒன்று முதலமைச்சர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றும் உங்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படும் என பதில் முதலமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டது. மேலும் இதன் போது கடமை நிறைவேற்று அதிபர்களை ஆசிரிய ஆலோசகர்களாக பதவியேற்று கொள்ளலாம் என ஆலோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. எனினும் இதனை அதிபர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த சந்திப்பில் பதில் முதலமைச்சர் மற்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின பொதுச செயலாளர் சரா.புவனேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ந - 4)

## சீனத்தூதுவர் - மகிந்த சந்திப்பு



அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் மஹிந்த ராஜபக்சவுடன் சீனா தூதுவர் திடீர் சந்திப்பொன்றை நேற்று நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பில் அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சீனத் தூதுவர் யீ சியாங்லியாங், அவரைச் சந்தித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியை வெளிநாட்டுக்கு வழங்குவதற்கு தமது எதிர்ப்பை மஹிந்த ராஜபக்ச இதன்போது வெளியிட்டதாக அவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், துறைமுக சட்டங்களை மீறி முன்னெடுக்கப்படுவதாகவும். நாட்டின் சட்டம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளை மீறி சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்கட்சி குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்த ஒப்பந்தத்தினூடாக 98 வருடங்களுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்படும் அதேவேளை குறித்த நிறுவனத்திற்கு 15 ஆயிரம் ஏக்கர் காணியை வழங்குவதனூடாக விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் கூட்டு எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன கூறியிருந்தார்.

இதேவேளை அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் காணிகளை சீன நிறுவனத்திற்கு வழங்குவதற்கு எதிராக அம்பாந்தோட்டை - மிரிஜ்ஜவில பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இந்த அமைதியின்மை தொடர்பில் கைது செய்யப்பட்ட 32 பேரும், அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அமைதியின்மையின் போது பலர் காயமடைந்தனர். படு காயமடைந்த ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்களும், மற்றுமொருவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ - 11)

# பண்டார வன்னியன் சிலையை கம்பீரமாக நிறுவ வேண்டும்!

### வடக்கு சபையில் நேற்று வலியுறுத்து

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகனின் ஏற்பாட்டில் மல்லாவியில் நிர்மாணிக்கப்பட்ட பண்டார வன்னியனின் சிலையை மீளப்பெற வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த சிலை கம்பீரமற்று இருப்பதாக கூறியே அந்த சிலையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான முதலாவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உறுப்பினர் மயூரனால் விசேட பிரேரணையாக மேற்படி விடயம் கொண்டுவரப் பட்டது. இதன் போது கருத்து தெரிவித்த அவர், முல்லைத்தீவு மல்லாவியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிலை, ஒன்றின் கீழ் பண்டார வன்னியன என எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு எழுதப்பட்டுள்ளதனை பார்த்த பின்னர் தான் அது பண்டாரவன்னியன் என எல்லோருக்கும் தெரிய வந்தது. பண்டாரவன்னியன் என்பவர் தமிழர் வரலாற்றில் வீரத்திற்காகவே முன்னுரிமை படுத்தப்படுகின்றார். இந்த நிலையில் அவருடைய வீரத்தை கொச்சைப்படுத்தும் வகையில மேற்படி சிலை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழன் வீரம் செறிந்தவன் என்பதற்கு பண்டாரவன்னியன்போன்றவர்களே உதாரண புருசர்களாக உள்ளார்கள். வெளிநாட்டவர்கள் இங்கு வரும் போது இந்த சிலையை பார்த்த பின்னர் தமிழர்களின் வீரத்தை எவ்வாறு எடை போடுவார்கள் என்று யாரும் சொல்லி தெரியவேண்டியதில்லை. எனவே குறித்த சிலையை புனரமைக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.

இதன் போது கருத்து தெரிவித்த ரவிகரன், இந்த சிலை தற்செயலாக செய்யப்பட்டது ஒன்றல்ல. மிகவும் திட்டமிட்டு அந்நிய சக்திகளின் ஊடுருவலுடனேயே இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சிலையை அங்கிருந்து அகற்றி வேறு ஒரு சிலையை நிர்மாணிக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னால் ஏற்கெனவே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பண்டாரவன்னியனுடைய சிலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று கொண் டுள்ளன.

இந்த நிலையில் தான் அவசர அவசரமாக கம்பீரமற்ற ஒரு சிலை அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். எனினும் இந்த சிலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரால் அமைக்கப்பட்டது என்பதனால், மாகாண சபையினால் முல்லைத்தீவில் வேறொரு சிலை வைப்பது என்ற முடிவுக்கு வருவதாக பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் தெரிவித்தார். (செ -4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர்
திருமதி வெலிசிற்றா றமணி
ஜெறாட் ஜெயந்தன்

யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலையில்
ஆங்கில பாட ஆசிரியராக கடமையாற்றிய
ஆசிரியர் திருமதி வெலிசிற்றா றமணி ஜெறாட் ஜெயந்தன்
அவர்கள் 02.01.2017 இல் தரம் - III அதிபராக பதவி உயர்வு
பெற்று தற்போது யா/இளவாலைக் கன்னியர்
மடம் ம.வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையேற்றுள்ளார்.
இவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்புற
வேண்டுமென இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

congrats!

அதிபர், ஆசிரியர்கள்
யா/சில்லாலை றோ.க.த.க.பா (C-7186)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



முத்தன் தவராசா (தவம்)

ஆண்டுகள் இரண்டு போனதையா!
இந்தப் பாரினிலே
உன்னைத் தினமும் தேடுகிறோம் ஐயா!
நீ சென்ற இடம் எங்கே ஐயா!
உன்பிரிவால் வாடும்

சிறிநாரத வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள் (C- 7190)



## காணி விற்பனை

யாழ்.நகர் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகே ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 077 873 0129 (7454)

## விற்பனைக்கு

A9 றோட் நுணாவில் சந்தி, மட்டுவில் வீதியில் 150 M தூரத்தில் 8 பரப்பும் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 10 பரப்பும் ராசா கடை முன் வீதியில் 200 M தூரத்தில் புதுவீடும் விற்பனைக்கு உண்டு. (7435)

077 873 0129

## வடமாகாண ஆசிரியர் தெரிவு

நேர்முகப் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு வியாழன் (12/01/2017) பிற்பகல் 2.30 - 4.00 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறும்.

(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகாமை)

வடமாகாண காணி வெளிக்கள போதனாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு வியாழன் (12/01/2017) காலை 10.00 மணிக்கு நடைபெறும். (C-7191)

தொடர்பு :- 0766883394

# யாழ்.பல்கலையின் 32 ஆவது பட்டமளிப்பு விழா ஆரம்பம்




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு நிகழ்வு நேற்றைய தினம் தமிழர் பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது. நேற்றுக் காலை 8.30 மணியளவில் விருந்தினர்கள் சம்பிரதாய பூர்வமாக அழைத்து வரப்பட்டு நேற்றைய முதலாவது அமர்வு 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2151 மாணவர்கள் பட்டம் பெற தகுதி பெற்றுள்ளனர். இம்முறை பட்டமளிப்பு விழாவின் 164 மாணவர்கள் பட்டப்பின் தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதுடன் 1275 மாணவர்கள் உள்ளக மாணவர்களாக பட்டம்பெற தகுதி பெற்றுள்ளனர். மேலும் 484 மாணவர்கள் வெளிவாரி பட்டதாரிகளாக பட்டம்பெறவுள்ளதுடன் 32 மாணவர்கள் டிப்ளோமா பட்டதாரிகளாக பட்டம்பெற தகுதி பெற்றுள்ளனர்.

(படங்கள்:-உ.சாளின்)

## இராசி பலன்

11.01.2017
(மார்கழி 27, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.10 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 4.01 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை
உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது சுக் செவ் | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம் | | |
| | | | ராகு |
| சூரி புத | சனி | | குரு |

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றி மறையும், பிறர் உதவியுண்டு.

**கடகம்** சுபகாரியச் செலவுகள் அதிகமாகும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சயன சுகக் குறைவான நாள்

**மகரம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**சிம்மம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் கிடைக்கலாம்.

**தனுசு** ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மாறுவர், நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வு அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அன்ரன் கலந்து சிறப்பித்திருந்தார்.

# தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் விபரத்தினை உறுதிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் எதிர்வரும் 16.01.2017, 17.01.2017, 18.01.2017, 19.01.2017 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வின் போது விண்ணப்பதாரர்கள் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் இருப்பதனை உறுதிப்படுத்தும் முகமாக "தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்" சமர்ப்பிப்பதற்குப் பதிலாக கிராம சேவையாளரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட "தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளரின் விபரங்களை குறிப்பிட்டுக் கொள்வதற்காக வழங்கப்படும் படிவத்தினையும்" சமர்ப்பிக்க முடியும் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ)

## பழைய மாணவர் ஒன்றுகூடல்

யா/ இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் கேட்டுள்ளார். (இ)

## பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கல்

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனின் 2016ஆம் ஆண்டுக்கான நிதியிலிருந்து ரூபா 50 ஆயிரம் பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவிற்காக ஒதுக்கியுள்ளார். இந்நிதிக்கான பிளாஸ்ரிக் கதிரைகளை வட மாகாண சமூக சேவைத் திணைக்களம் கொள்வனவு செய்து 72 பிளாஸ்ரிக் கதிரைகளை யாழ். மாவட்ட முதியோர் பேரவைக்கு கையளிக்கவுள்ளது. (இ-134)

# வழக்கை எதிர்கொள்ளத் தயார் வடக்கு சபை முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய வழக்குத் தொடரும் என்றால் அதனை எதிர்கொள்ள வடக்கு மாகாண சபை தயாராகவே உள்ளது என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள பனை, தென்னைவள கூட்டுறவு சங்கங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும் கள்ளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் வெளி மாகாணங்களில் இருந்து கொண்டுவரப்படும் கள்ளை விற்பனை செய்ய முடியாது என்ற தீர்மானத்தையும், வடக்கு மாகாண சபைக்கு என தனியானதொரு கீதம் ஒன்றை இயற்றுவது என்ற தீர்மானத்தையும் வடக்கு மாகாண சபை கடந்த மாதமளவில் நிறைவேற்றி இருந்தது.

இந்த தீர்மானங்களை அடுத்து தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இனவாதிகளும் பெரும கூச்சலிட்டனர். குறிப்பாக அண்மையில், வடக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்து கொண்டுவரப்படும் கள்ளை வடக்கில் விற்பனை செய்வதனை தடை செய்யும் பிரேரணை ஒன்று வடக்குமாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையை விவசாய கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முன்மொழிந்திருந்தார். வடக்கு மாகாண சபையின் 74 ஆவது அமர்வு கடந்த மாதம நடைபெற்றது.

இதில், வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் அச்சங்கத்தின் அங்கத்தவர்களால் பனை மற்றும் தென்னையில் இருந்து இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கென உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்கள் ஆகும். எனினும் வடக்கில் உள்ள சில பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் வடக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்து.செயற்கையாக நொதிக்க வைக்கப்பட்டு உருவாக்கப்படும் இரசாயன கள்ளை எடுத்து வந்து விற்பனை செய்வதனை அறியக்கூடியதாக உள்ளது.

இந்த நடவடிக்கை தங்களின் உற்பத்தியை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படுவதாக பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவராக உள்ள பனஞ்சாறு உற்பத்தியாளர்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர். அத்தோடு பல்வேறு பொது அமைப்புக்களும் இக் கள்ளின் விற்பனையை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவற்றை கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் வடக்குக்கு வெளியே இருந்து எடுத்து வரப்படும் கள்ளின் விற்பனையை அது எத்தகைய கள்ளாயினும் உடனடியாக தடை செய்ய வேண்டும் எனவும் இச் சங்கங்கள் வடக்கில் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் கள்ளினை மாத்திரமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் இந்த சபை கோருகின்றது என்ற பிரேரணையை அமைச்சர் ஐங்கரநேசன் முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதனால் சிங்களவர்களின் உற்பத்திகளை வடக்கு மாகாணம் தடை செய்துள்ளது என தென்னிலங்கை இனவாத கட்சியான ஹெல உறுமய குரல் கொடுத்தது. மேலும் வடக்கு மாகாண சபை மீது நாட்டை துண்டாட முயற்சி செய்வதாக கூறி வழக்கு தொடரப்போவதாகவும் எச்சரிக்கை செய்திருந்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபை இனவாத நோக்குடன் எதனையும் செய்யவில்லை. பௌத்த விஹாரைகள் இங்கு கட்ட முடியாது எனவும் தீர்மானம் எதனையும் இயற்றவில்லை. மாறாக அனுமதி இன்றிய கட்டடங்களே கட்ட முடியாது என தீர்மானத்தை இயற்றினோம்.

இது தவிர தென்னிலங்கை கள்ளுக்கு வடக்கு மாகாண சபை தடை விதிக்கவில்லை. தனியார் நிலையங்களில் அது விற்பனை செய்யப்படுகின்றது. கூட்டுறவு சபைகளிலேயே விற்பனை செய்யமுடியாது என்ற தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. அதுவும் எங்கள் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கே இப்படியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இந்த நிலையில் வடக்கு மாகாண சபையை இனவாத சபையாக காட்டி தென்னிலங்கை அரசியல்வாதிகள் பேசுவது கவலையளிக்கின்றது. ஹெல உறுமய வழக்கு தொடர்ந்தால் அதனை வடக்கு மாகாண சபை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பொங்கல் பொதி விற்பனை




நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினரினால் பொங்கல் பொதி விற்பனை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 230 ரூபா பெறுமதியான பொங்கல் பொதியினை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ம.ஜெநாதன் அரம்பித்து வைத்தார். இவ்வைபவம் சங்க மண்டபத்தில் 09.01.2017 அன்று நடைபெற்றது. (இ-60)

## உழவியந்திரத்தை மோதிய புகையிரதம் மயிரிழையில் உயிர்தப்பினார் சாரதி






உழவியந்திரத்தின் மீது புகையிரதம் மோதியதில் உழவியந்திர சாரதி சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் இடம்பெற்றது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கற்களை ஏற்றிச் சென்ற உழவியந்திரம் புகையிரதக்கடவையில் சென்ற போது புகையிரதம் மோதியதில் உழவியந்திரச் சாரதி தூக்கி வீசப்பட்டார். உழவியந்திரம் பலத்த சேதங்களுக்கு உள்ளானது. இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)



மழையின்றி நெல்வயல்கள் அழிவடைந்து வருகின்ற நிலையில் தென்மராட்சியில் விவசாயிகள் கிணற்றில் இருந்து நீர்ப்பம்பி மூலம் நீர் இறைத்து வயல்களைப் பராமரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

(படம்:-கிஷோர்)

# துர்நாற்றம் வீசும் கழிவு வாய்க்கால்

பாடசாலைக்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்கால் துப்புரவு செய்யப்படாமையினால் துர்நாற்றம் வீசுகிறது.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்காலே இவ்வாறு காணப்படுகிறது.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள கழிவு வாய்க்காலினை துப்புரவு செய்ய வேண்டியது பருத்தித்துறை நகர சபையினரின் பொறுப்பாகும். ஆனால் பாடசாலைக்கு முன்பாகவே துர்நாற்றம் வீசும் நிலையில் உள்ள கழிவு வாய்க்கால் குறித்து நகரசபை கவனம் செலுத்தாமையினால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-60)

அண்ணாமலை பல்கலைக்கழக பண்ணிசைப் பேராசிரியரின்

# திருவாசக அர்ச்சனை




அமரர் திருமதி சரஸ்வதி ஆறுமுகம்

(இளைப்பாறிய உப அதிபர், ஆசிரியர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

அவர்களின் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வில் 12.01.2017 வியாழக்கிழமை காலை 9.30 முதல் 11.15 வரை நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் பேராசிரியர் தேவார இசைமணி குமார வயலூர் திருஞான பாலச்சந்திரன் அவர்களின் திருவாசகம் இசை அர்ச்சனை இடம்பெறும்.

அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



திருஞான பாலச்சந்திரன்

(7434)

246, 4/ஏ, கோவில் வீதி, நல்லூர்.

குடும்பத்தவர்கள்.

## பெருந்தொகை நாணயங்கள் நள்ளிரவில் மீட்கப்பட்டன

இலங்கையிலிருந்து 2 கோடி 80 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு நாணயத்தாள்களை சட்டவிரோதமாக கொண்டு செல்ல முற்பட்ட போது நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப் பட்டுள்ளது.

ஈரான் பிரஜையொருவர், தனது பயணப்பையில் இவ்வாறு குறித்த பணத் தொகையை மறைத்து வைத்து கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக கட்டாருக்கு கொண்டு செல்ல முற்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதால் அவரின் பயணப்பை சோதனை செய்யப்பட்டுள்ளது.

இதன்போது அதில 2 இலட்சத்து 77 ஆயிரம் யூரோ நாணயத் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தீவிரப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

**Join with CIMA in Jaffna**

CIMA EP Academy

எங்கேயும் எப்போதும் உங்கள் பிள்ளைகளுக்கான உலகளாவிய அங்கீகாரத்தை பெறுவதற்கு இன்றே CIMA வுடன் இணைந்திருங்கள்

**EP Academy (ExamPoint) Jaffna** ஆனதுயாழில் **CIMA**. ஆல் அங்கிகரிக்கப்பட்ட ஒரே யொரு**CIMA exam centre**. இப்போது இங்கு **CIMA**கற்பித்தலும் (**CIMA learning partner**) ஒரே கூரையின் கீழ் இயங்குகின்ற நிறுவனம்.

உங்கள் பிள்ளைகளினுடைய வளமான எதிர்காலத்திற்காக இன்றே முதலிடுங்கள் CIMAவுடன்

CIMA கற்கைநெறியானது உலகளாவியநாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள Qualification மட்டு மல்லாது சிறந்த வருமானத்துடன் கூடிய உடனடி வேலைவாய்ப்பையும் பெற்றுத் தரக்கூடிய ஒரு சிறந்த கல்வித்தகைமையாகவும் காணப்படுகிறது.

இதனை பூர்த்தி செய்தவர்கள் இன்று நாடளாவியரீதியிலும் உலகளாவியரீதியிலும் உள்ள பிரபலவணிக நிறுவனங்களில் சிறந்த வருமானத்துடன் கூடிய பதவிகளை வகிக்கின்றார்கள்.

**EP Academy**இல் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று **CIMA – Colombo** பிரதிநிதிகள் வருகை தந்துபரீட்சை சம்பந்தமான விளக்கங்களையும் தெளிவூட்டல்களையும் மாணவர்களுக்கு வழங்கினார்கள். அதுமட்டுமல்லாது 2017ம் ஆண்டு **CIMA** கற்கைநெறியை மேற்கொள்ள இருக்கும் மாணவர்களுக்கான மட்டுப்படுத்த ப்பட்டபதிவுகளும் அன்றையதினம் மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரம்கடந்த October மாதம் நடாத்திய CIMA Open day நிகழ்விற்குColombo - CIMA பிரதிநிதிகள் வருகைதந்து கலந்துசிறப்பித்திருந்தனர். அத்தருணம் பலபெற்றோர்கள், மாணவர்கள் வருகைதந்துநேரடியாக அவர்களுடன் கலந்துரையாடியது மட்டுமல்லாது உடனடியாகதமது அனுமதிகளைபெற்று EP Academy இல் கற்கைநெறியை கற்பிப்பதற்கு ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணமாணவர்களுக்கும், கணக்காளர்களும் தங்களுடைய எதிர்காலத்தை **CIMA** உடன் விருத்திசெய்ய நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும் **EP Academy Jaffna** முகாமையாளர் கூறியுள்ளார். மேலும் கூறுகையில் இங்கு CIMA கற்கைநெறியை தொடரும் மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கிலகற்கைநெறிகள், Typing course மற்றும் இலவசமான பரீட்சைகளையும் வழங்குகின்றோம்.

CIMA வானதுயாழ் வணிக்கல்விபீடத்துடன் மிகவும் நெருங்கிய உறவைவைத்துள்ளது மட்டுமன்றிஅவர்களின் கல்விமற்றும் தகுதிகளைஉயர்த்தகூடியநிலையிலும் உள்ளது.

G.C.E A/L பூர்த்திசெய்தஉங்கள் பிள்ளைகளிற்கு இது ஒருசிறந்தவழிகாட்டலாகவும் சிறந்த முதலீடாகவும் அமையும் என்பதுதிண்ணம். பலபெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் வேண்டு கோளிற்கிணங்க இம்முறை (January batch 2017) பதிவுகளைமேற்கொள்ளும் முதல் 40 மாணவர்களிற்கு 10% சிறப்புச் சலுகையைவழங்குகிறார்கள்.

**EP Academy இன் CIMA முன்னணிவிரிவுரையாளர்களின் கருத்துக்கள்**

CIMAசான்றிதழானது முதலீட்டு முகாமைத்துவ ஆலோசனை சார்ந்தசெயன் முறைகளிலே கவனம் செலுத்துகிறது. உற்பத்திகள் தொடர்பாககற்றுக்கொள்ளபலவிடயங்கள் உள்ளன. CIMA கற்கைநெறியில் நீங்கள் உற்பத்திசெயன்முறைகளின் சந்தர்ப்பங்கள் தொடர்பாக கற்றுக் கொள்வீர்கள். இதன் மூலமாகஉங்கள் தொழிலிலேசிறப்பாகசெயற்பட்டு உங்கள் வாடிக்கை யாளர்களின் நோக்கங்களையும் இலக்குகளையும் சிறப்பாகநிறைவுசெய்யமுடியும்.

**CIMA Certificate level** புதியபிரிவுகள் **January** மற்றும் **February** இல் ஆரம்பமாகும்.

தொடர்புகளுக்கு :- 0776 28 48 45

EP Academy (ExamPoint)
No.120/6, Palaly Road, Kantharmadam,
Jaffna, Sri Lanka.
Phone: +94 (0)21 2216400
Hotline: +94(0)776284845
e-Mail: info@exampoint.lk

40 மாணவர்களிற்கு 10%சிறப்புச் சலுகை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி. உதயகுமார் கார்த்திகா (BFA)

11.01.2016, இன்று யாழ்.பல்கலைக் கழக 32ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணி (BFA) பட்டம் பெறும் உதயகுமார் கார்த்திகா கல்வியிலும் கலைகளிலும் சிறப்புற்று வாழ்வில் வளம்பெற நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

(C-7176)

நிரந்தர முகவரி.
பலாலி மேற்கு. வயாவிளான்.

குடும்பத்தினர்
அப்பா - உதயகுமார் (கிளி), அம்மா - ஜீவமலர்
தேவாலய வீதி. சங்கானை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி தவஈஸ்வரி தயாபரன்
(B.A. HONS,Dip.in Edu,MEd)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று 11.01.2017 நடைபெறும் 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (First class) பட்டம் பெறும் ஆசானை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(7444)

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய,
ஆசிரிய நலன்புரிச் சங்கம்.

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1986 இந்து
  நட்சத்திரம்: ஆயிலியம்
  உயரம்: 5'8"
  தகைமை/தொழில்:Eng/முகாமையாளர் அமெரிக்கா
  தொ.இ: B/6752
- பிறப்பு: 1978 இந்து
  நட்சத்திரம்: உத்தரம்
  சூரிசெவ் 11 இல
  உயரம்: 5'4"
  தகைமை/தொழில்:O/Lபிரான்ஸ் NOT PR
  எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
  தொ.இ: B/6753
- பிறப்பு: 1975 இந்து
  நட்சத்திரம்: சித்திரை
  கி.பா: 19
  உயரம்: 5'3"
  தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR
  எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
  தொ.இ: B/6754
- பிறப்பு: 1979 இந்து
  நட்சத்திரம்: பூசம்
  கி.பா: 56செவ் 12 இல்
  உயரம்: 5'3"
  தகைமை/தொழில்:O/L/அமெரிக்கா
  தொ.இ: B/6755

## இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1983 இந்து
  நட்சத்திரம்: பரணி
  கி.பா: 47செவ் 8 இல்
  உயரம்: 5'2"
  தகைமை/தொழில்:BA/அரசதொழில்
  தொ.இ: G/3634
- பிறப்பு: 1985 இந்து
  நட்சத்திரம்: மூலம்
  கி.பா: 46செவ் 1 இல்
  தகைமை/தொழில்:O/L
  தொ.இ: G/3638
- பிறப்பு: 1982 இந்து
  நட்சத்திரம் ஆயிலியம்
  கி.பா: 5
  உயரம்: 5'6"
  தகைமை/தொழில்:BSc, MBA/பொறியியலாளர்
  தொ.இ: G/3658
- பிறப்பு: 1985 இந்து
  நட்சத்திரம்: மூலம்
  கி.பா: 59சூரிசெவ் 10 இல்
  உயரம்: 5'3"
  தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில்
  தொ.இ: G/3662

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

# கசிப்பு போத்தல்களை வைத்திருந்த நபர் கைதாகி பிணையில் விடுவிப்பு

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தருமபுரம் 05 ஆம் யுனிட் குடியிருப்பு பகுதியில் சட்ட விரோத கசிப்பு 8 போத்தல்களை விற்பனை நோக்குடன் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கா தலைமையில் சென்ற பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போதே கசிப்புக் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது கைதான சந்தேக நபரிடம் விசாரணை நடைபெற்று முடிந்துள்ள நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மீண்டும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருளுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் சந்தேக நபர் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் வீதிகள் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் 1200 கிலோமீற்றர் வரையான வீதிகள் புனரமைக்க வேண்டியுள்ளது. அதற்கான நிதி கிடைக்கும்போது அதனை புனரமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி சுகந்தி கிசோர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,வவுனியா மாவட்டத்தின் வவு னியா தெற்கு தமிழ் பிரதேச சபைக் குடபட்ட கிராமங்களின் கூடுதலான கிராமங்களின் பிரதான வீதிகள் மற்றும் குடியிருப்பு வீதிகள் பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளாக காணப்படுகின்ற போதும் இந்த வீதி கள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட கோயில் குளம் .வேலங்குளம், இரண்டாம் செங்கற்படை, கிடாய்சூரி ஆகிய பகுதிகளில் உள்ள பல வீதிகள் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு பின் தங்கிய பகுதிகளில் வாழும் மக்கள் தமது கிராமங்களுக்கான வீதிகளை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சுகந்தி கிசோர் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடுகளில் உட்கட்டுமானத்திருத்தங்களுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப்பிரதேச சபையின் கீழ் சுமார் 1200 கிலோ மீற்றர் வீதி காணப்படுகின்றது.

இதில் வசதி குறைந்த பின்தங்கிய கிராமங்களுக்குரிய வீதிகளை தெரிவு செய்து அதற்குரிய மதிப்பீடுகளை செய்து வழங்கியுள்ளோம். எங்களுக்கு எவ்வளவு விரைவாக நிதி விடுவிக்கப்படுகின்றதோ அதற்கு அமைவாக அதனைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வேளாங்கண்ணி மாத சொரூபம் விசமிகளால் உடைப்பு



(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் கங்கான்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் மாதா சொரூபம் விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கடகிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவ்து.

செட்டிகுளத்தில் உள்ள கங்கன்குளம் பகுதியில் உள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் முன்றலில் உள்ள மாதா சொரூபமே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஆலயத்தின் குரு முதல்வர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தடயங்களை பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (2-15)

# விசுவமடு பிரதேசத்தில் மஞ்சள் செய்கை வெற்றியளித்துள்ளது

(பூநகரி)

விசுவமடு பிரதேசத்தில் மஞ்சள் பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளதாக றகமா நிறுவன (மீள் உருவாக்கம் புனரமைப்பிற்கான மனிதாபிமான செயற்பாட்டு முகாமைத்துவ நிறுவனம்) தொழில்நுட்பவியலாளர் கே.வி.தோமஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வன்னிப்பிரதேசத்தில் மஞ்சள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு மண்வள ஆய்வை றகமா நிறுவனம் மேற்கொண்டது.

இதன்பிரகாரம் விசுவமடு பகுதியில் இச்செய்கை மேற்கொள்ளப் பட்டது.எட்டு மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய குறித்த செய்கை விசுவமடு பகுதியில் பெரும் வெற்றியளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.ஒரு கிலோ விதைக்கு 5 தொட க்கம் 8 கிலோகிராம் விளைச்சல் எதிர்பார்த்திருந்ததாகவும் தற்போது 18 தொடக்கம் 20 கிலோ கிராம் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.இதேவேளை பனைநின்றான் கிராமத்திலும் மண்ஆய்வு மேற்கொள் ளப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு ள்ளது.

அத்துடன் கடந்த 7ஆம் திகதி முழங்காவில் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் முழங்காவிலில் மஞ்சள் செய்கைக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

கமக்கார அமைப்பின் தலைவர் பூ.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் மஞ்சள் உற்பத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சியும் விளக்கமும் றகமா நிறுவனத்தைச் சேர்ந்தவர்களினால் வழங்கப்பட்டது.இதில் 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உடனடியாக மஞ்சள் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்பில் ஆண், பெண் என இருபாலாரும் கலந்து கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (2-84)

# துணுக்காய்,முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளில் உடற்தகுதி பரிசோதனை பெறமுடியாத நிலை

## வீர/வீராங்கனைகள் கவலை

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய வலயக் கல்விப் பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் பல திறமையான விளையாட்டு வீர/வீராங்கனைகள் உடற்தகுதி வைத்திய பரிசோ்தனை அறிக்கை பெற முடியாமை காரணமாக தமக்கான வாய்ப்புக்களை இழந்து உள்ளதாக மாணவர்கள் ,பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் எதிர்வரும் மாத நடுப்பகுதிக்குள் பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் மாணவர்கள் மத்திய /மாகாண கல்வி அமைச்சுக்களின் சுற்றறிக்கைகளின் படி உடற்தகுதி வைத்திய சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் ஒரு வைத்தியர் உடற்தகுதி பரிசோதனை மேற்கொள்வதற்குரிய பயிற்சி செயலமர்வை முடித்துள்ளார்.

ஆயினும் அவரும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் வெளியக/ உள்ளக நோயாளர்களை பார்வையிடுவது உட்பட பல்வேறு வேலைப்பளுக்கள் மத்தியில் வைத்திய சேவைகளை வழங்கி வரும் நிலையில், மாணவர்களுக்கு உடற்தகுதி பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மல்லாவி ஆதார வைத்தியசாலையில் இருந்த இப்பரிசோதனை செய்யக் கூடிய வைத்தியரும் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டார்.

இதனால்.துணுக்காய் / மாந்தை கிழக்கு /ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செய்லாளர் பிரிவில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் உடற்தகுதிப் பரிசோதனைச் சான்றிதழ் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டும் வீர / வீராங்கனைகள் கோட்ட மட்டம் , வலயமட்டம்,மாகாண மட்டம் பின்னர் தேசிய மட்டம் என படிப்படியாக விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இவ்வாறான நிலையில். முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் உடற்தகுதிப் பரிசோதனைச் சான்றிதழ் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் தற்போது நல்லாட்சி அரசின் ஆட்சி நடைபெறும் காலத்திலும் எமது மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை காணப்படுவதாக மாணவர்களது பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் கவனத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என்று கோரிக்கை ஒன்றையும் மாணவர்களது பெற்றோர்கள் முன்வைத்துள்ளனர். (2-15)

# தைப்பொங்கல் விழா

(புதுமுறிப்பு)

ஊற்றுப்புலம் கிராமத்தில் தைப்பொங்கல் விழா அறிவொளி வலய அமைப்பின் அனுசரணையுடன் காலை 9மணிக்கு மேற்படி கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெறும்.

இந்நிகழ்வு ஊற்றுப்புல கிராம முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும். (2-307)




# மரதன் ஓட்டம்

(புதுமுறிப்பு)

உருத்திரபுரம் மகா வித்தியாலய மாணவர் களின் மரதன் ஓட்டப் போட்டி இன்று புதன் கிழமை அதிகாலை-5.30 மணிக்கு கிளி நொச்சி கரடிப்போக் குச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி கிளி/உருத்திரபுரம் மகா வித்தியால யத்தைச் சென்றடையும்.

இதேவேளை பெண் போட்டியாளர்களின் மரதன் ஓட்டம் கிளி/ இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்ப மாகி கிளி/உருத்திரபுரம் மகா வித்தியா லயத்தைச் சென்றடையும். (2-307)

# கிளிநொச்சி சிவநகர் கிராமத்தில் சனசமூக நிலையம் திறந்து வைப்பு



கிளிநொச்சி சிவநகர் கிராமத்தில் சனசமூக நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணிக்கு திறந்து வைத்தார். குறித்த சனசமூக நிலையம் ஏழு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது

சிவநகர் மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர் இ.ரகுபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராம அலுவலர் மற்றும் ஆசிரியர்கள் , கரைச்சி பிரதேச சபையின் நூலகர் ,பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (2-312)

# நாடு தழுவிய ரீதியில் 13,200 வகையான தாவர வகை மரக்கன்றுகள் நடுகை

## வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் கட்டளை தளபதி தெரிவிப்பு

(மல்லாவி)

நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன கடமையேற்று இரண்டு வருட நிறைவை முன்னிட்டும், தேசிய மரநடுகை திட்டத்திற்கு அமைவாக நாடு தழுவிய ரீதியில். மரக்கன்றுகள் நடுகை செய்யும் திட்டம், இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கமைவாக வன்னிப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் பயன்தரு மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருவதாக வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

சுமார் 13 ஆயிரத்து 200 இற்கும் அதிகமான பல்வேறு வகையான தாவர வகையைச் சேர்ந்த மரக்கன்றுகள் நாடு தழுவிய ரீதியில் இராணுவ வீரர்களினால் இதுவரை நடுகை செய்யப்பட்டுளளது.


இதற்கமைய வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சேர்ந்த படை வீரர்களினால் 2 ஆயிரத்து 800 வல்லை மரக்கன்றுகள் படைத்தலைமையக வளாகத்தில் நடுகை செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் மா, வேம்பு, தேக்கு மற்றும் பனை உள்ளிட்ட 2100 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு ஏனைய படைத் தளங்களைச் சேர்ந்த படையினரும் இத்திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை தமது பாதுகாப்பு எல்லைக்கு கட்டுப்பாட்டுள்ள பிரதேசங்களில் நடுகை செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வடக்கின் ஆரோக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் உலக உணவுத்திட்டம் பெரும் பங்காற்றுகிறது

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் பசிப்பிணி போக்கும் மருத்துவனாக மிகப்பெரும் மனிதாபிமானப் பணியை உலக உணவுத் திட்டம் ஆற்றி வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணத்தில் 964 பாடசாலைகளில், தரம் ஒன்று தொடக்கம் 9 வரை கல்வி பயிலும் 1,60,000 வரையான மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த எண்ணிக்கை குறைந்த ஒரு தொகையல்ல. இது வடக்கு மாகாணத்தின் மொத்த சனத் தொகையில் 13 வீதம். இதன் மூலம் உலக உணவுத்திட்டம் வடக்கில் ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்களிப்பை நல்கி வருகிறது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத்திட்ட நிறுவனத்தின் பாடசாலை மாணவர்களுக்கு உணவு ஊட்டும் திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்குரிய இந்த ஆண்டின் தொடக்க நிகழ்ச்சி வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது,

உலகின் மிகப்பெரிய மருத்துவனாக நான் உலக உணவு திட்டத்தையே குறிப்பிடுவேன். தமிழின் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் பசிப்பிணி மருத்துவன் என்ற சொற்றொடர் ஒன்று உள்ளது.

பசித்த வாய்க்கு ஆகாரம் இடுபவன் வெறுமனே குடலில் ஏற்படும் பசி உணர்வை மாத்திரம் தணிக்கவில்லை. பசித்தவனின் உடல் ஆரோக்கியத்துக்கும், உள ஆரோக்கியத்துக்கும் ஒவ்வொரு கவளம் உணவும் ஒவ்வொரு அத்திபாரக் கல்லாக அமைகிறது.

அதுவும், குழந்தைகளின் பசியைப் போக்குவது என்பது வேறு எந்த மருந்தும் தரமுடியாத உடல், உளநல ஆரோக்கியத்தை அந்தப் பாலகர்களுக்குத் தருகிறது.

அந்த வகையில் உலகின் தலைசிறந்த மருத்துவனாக உலக உணவுத் திட்டம் ஆண்டுதோறும் உலகில் 20 மில்லியன் குழந்தைகளுக்கு உணவை வழங்கி வருகிறது.

உலகின் தலைசிறந்த ஆசிரியனாகவும் உலக உணவுத்திட்டம் விளங்குகிறது. உலகின் அறிவுப்பசியைத் தீர்க்கவல்ல நல்லாசிரியர்களாலேயே மாணவர்களைப் பாடசாலையை நோக்கிக் கவர்ந்திழுக்க முடியும்.

நல்லாசிரியன் ஒருவனாலேயே, மாணவர்களின் மனோநிலையைக் கற்றலுக்கேற்ற தயார் நிலைக்குக் கொண்டுவரமுடியும்.

இன்று உலக உணவுத்திட்டம் மாணவர் களைப் பாடசாலையை நோக்கிக் கவர்ந்திழுக்கும் காந்தம் போலச் செயற்பட்டு வருகிறது.

பெரும்பாலான மாணவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற உணவுதான் அவர்களுக்குக் கிடைக்கும் போசாககு நிறைந்த உணவாக உள்ளது. அநேக மாணவர்களுக்குப் பாடசாலையில் கிடைக்கும் ஒரு நேர உணவுதான் அவர்களுக்கு ஒரு நாளில் கிடைக்கும் ஒரே உணவாகவும் உள்ளது.

அந்த வகையில் உணவைக் காட்டியேனும் மாணவர்களைப் பாடசாலைக்கு வரவழைத்து, பசியை போக்குவதன் மூலம் கற்றலுக்கான அகச்சூழலையும் உருவாக்குகின்ற மிகப்பெரும்பணியை உலக உணவுத்திட்டம் ஆற்றி வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் சரஸ்வதி மோகநாதன் தலைமையில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில் வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இயக்குநர் டேவிட் காற்றுட், இலங்கைக்கான பிரதிநிதி எஷல்லி வைற்றிங் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (2)

# வவு.வடக்கில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற பாடசாலை

(குருமன்காடு)

வெளியாகிய க.பொ.த.( உ/த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவன் வர்த்தக பிரிவில் 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட நிலையில் முதலாமிடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதுடன், 16 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கணிதப்பிரிவில் செல்வதேவன் ஹனுஷ்யன் 2ஏ,பி சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் நான்காம் இடத்தினையும், வர்த்தகப் பிரிவில் ரங்கநாதன் யதுகுலன் 3ஏ சித்தி களை பெற்று மாவட்ட ரீதியில் முத லாம்இடத்தையும்பெற்றுள்ளனர.

இப் பாடசாலை வரலாற்றிலும், வவுனியா வடக்கு வலய வரலாற்றிலும் வர்த்தகப்பிரிவில் முதலாமிடத்தினை பெற்றது இதுவே முதற் தடவையாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# க.பொ.த.(உ/த) பெறுபேறு-2016

**கிளி/கிளிநொச்சி**
**இந்துக்கல்லூரி**

**கணிதப்பிரிவு**
வி.விதுசன்-ஏ2சி

**விஞ்ஞானப்பிரிவு**
க.கஜானன்- 3பி, கோ.விதுசன்-பி2சி, பா.அரவிந்தன்-2சிஎஸ்.

**உயிர்முறைகள் தொழில்நுட்பம்**
ம.தாத்திகரன்-ஏ2பி,சி.தர்சிகா-2பிசி, ம.லோஜிதா-2பிசி, செ.வனஜா-பிசிஎஸ்.

**பொறியியல் தொழில்நுட்பம்**
சி.நிரோபன்-2சிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**
ச.தபோஜன்-3ஏ, கு.மதுசியா-3ஏ, ர.திபாகர்-2ஏபி, த.ஜெனித்தக்சயன்-2ஏபி, கோ.சந்தியா-2ஏபி, வி.கம்சரூபன்-2ஏசி

**கலைப்பிரிவு**
ஜெ.பிரமதேவா-3ஏ, செ.கிருஷாந்தி-3ஏ, பா.மாருதி-2ஏபிசெ.குகதாஸ்-2ஏபி,ப.கௌசிகா-ஏபிசி.(2-307)




# பொலிஸாரினால் பேணப்படும் ஆவணங்கள், வாகனங்கள் தொடர்பில் பரிசோதனை





முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை பொலிஸ் நிலையமானது கடந்த 7 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்தகந்தேவத்தவினால் பரிசோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இப்பரிசோதனை நடவடிக்கையின்போது பொலிஸ் நிலையத்தினுடைய சகல பிரிவுகளிலும் பொலிஸாரால் பேணப்படும் ஆவணங்கள், பொலிஸாரின் சீருடை வாகனங்கள் என்பன தொடர்பாகவும் பரிசோதனைகளை அவர் மேற்கொண்டு தவறுகளை சுட்டிக் காட்டி அறிவுரைகளையும் வழங்கியிருந்தார். (2-310)

# ஒவ்வொரு மணித்துளிகளையும் பயன்படுத்துங்கள் வெற்றி நிச்சயம்

## உயிர் முறைகள் தொழில்நுட்ப பிரிவிலும் வடக்கு மாகாணத்திலும் முதலிடம் பெற்ற தர்மசீலன் கருத்து



வடக்கு மாகாணத்தில் உயிர்முறைகள் தொழில் நுட்ப பிரிவில் வவுனியா செட்டிகுளம மகா வித்தியாலய மாணவன மணிவேல் தர்மசீலன் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மணிவேல் தர்மசீலன் என்ற மாணவன் உயிர் முறைகள் தொழில்நுட்பப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

வடக்கு மாகாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் முதலாமிடத்தையும், தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளார். தனது வெற்றி குறித்து அந்த மாணவன் கருத்து தெரிவிக்கையில்,

கஷ்டப்பட்டு படித்தேன். ஆனால் இப்படி வருவேன் என எதிர்பார்க்கவில்லை. எனது அம்மா, அப்பா தோட்டம் செய்து தான் என்னை படிக்க வைத்தார்கள். நானும் அவர்களுடன் இணைந்து விடுமுறை நாட்களிலும், மாலை வேளைகளிலும் தோட்டம் செய்து தான் படித்தேன். எனது கிராமம் செட்டிகுளம், நித்திக்குளம் என்ற மிகவும் பின் தங்கியது.

அதில் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வாகனப்போக்குவரத்து இல்லை. நடந்து சென்று பிரதான வீதிக்கு போனதும் பேருந்தில் ஏறி தான் பாடசாலை போய் படித்தேன். சில நாட்களில் முதலாம் பாடம் முடிந்த பின்கூட நான் பாடசாலை போன சம்பவம் உள்ளது.

பிரத்தியேக வகுப்புக்கு இரண்டு பாடத்திற்கு சென்றிருந்தேன். அதற்கு 15 கிலோ மீற்றர் பேருந்தில் சென்றே படித்தேன். இப்படியான ஒரு பின்தங்கிய கிராமத்தில் இருந்து ஒரு விவசாயி மகன் வடக்குமாகாணத்தில் முதலிடம் பெற உழைத்தவர்களை என்னால் மறக்க முடியாது.

எதிர்காலத்தில் பரீட்சை எழுதவுள்ள எனது தம்பி, தங்கையர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒரு விவசாயி மகனான என்னால நடந்து சென்று இவ்வளவு கஷ்டத்திற்கு மத்தியில் சாதிகக முடிந்திருக்கின்றது என்றால் ஏன் உங்களால் முடியாது. நச்சயமாக ஒவ்வொரு மணித்துளிகளையும் பயனுள்ளதாக பயன்படுத்துங்கள். வெற்றி பெறுவீர்கள் எனத் தெரிவித்தார். (2-250)

# புத்தாண்டுப் பலன்கள்



**பேச்சுத் திறனால் மற்றவர் மனதில் இடம்பிடிக்கும் மீன இராசி அன்பர்களே!**

உதவும் மனமும், ஒப்பற்ற குணமும் உங்களுக்கு உண்டு. முதலில் ஒரு காரியத்தை செய்யத் தயங்குவீர்கள். பின்பு பல பேரிடம் யோசனை கேட்டு அதை வெற்றிகரமாக முடித்துவிடுவீர்கள். உங்களிடம் பொறுமை இருக்குமே தவிர, பொறாமை இருக்காது. இக்கட்டான காரியங்களைக் கூட எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் இராசிநாதன் குருபகவான் ஆவார். அவருக்கு பகைக் கிரகமாக விளங்குபவர் களத்திரகாரகன் சுக்ரன். எதிர், எதிர் துருவங்களாக இரண்டும் அமைந்ததால், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, முக்கிய பொருத்தங்கள் இருக்கிறதா? என்று பார்த்து செய்து கொண்டால் வாழ்க்கை இனிக்கும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் கிரக நிலைகள் சாதகமாக இருந்தாலும், பெயர்ச்சியாகப் போகின்றன. அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. குருப்பெயர்ச்சிக்குப் பிறகு விழிப்புணர்ச்சி கூடுதலாக இருந்தால் தான், வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். ராகு 5ஆம் இடத்திற்கும், கேது லாப ஸ்தானத்திற்கும் செல்லப் போகிறார். எனவே நன்மையும், தீமையும் வரும். பெயர்ச்சிக்கு முன்னதாக தாராபலம் பெற்ற நாளில் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

அடுத்து வரும் சனிப்பெயர்ச்சி அற்புதமானது. தொழில் வளர்ச்சி சிறப்பாக அமைய உறுதுணை புரியப் போகிறது. பெரிய கிரகங்கள் பெயர்ச்சியாகின்ற பொழுது, உரிய விதத்தில் பரிகாரங்களை மேற்கொண்டால் அரிய பலன்கள் கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக்காலம்**

27.07.2017 அன்று ராகு,கேதுக்கள் பெயர்ச்சியாகின்றன. இதுவரை 6ஆம் இடமான சூரியன் வீட்டில் சஞ்சரித்த ராகு, இனி 5ஆம் இடமான சந்திரன் வீட்டில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். மக்கள் செல்வங்களால் பிரச்சினைகள் உருவாகும். கண்சிமிட்டும் நேரத்தில் கூட எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். பூமிப் பிரச்சினைகள் தலைதூக்கும். பூர்வீகச் சொத்துகளில், முடிவான தீர்மானங்கள் கூட மாற்றப்படலாம். அதிக முயற்சியின் பேரில் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.




லாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால், எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சாயாபலம் பெற்ற கேது, சனி வீட்டில் சஞ்சரிக்கிறார். சனி உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும், விரய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர். எனவே தொழிலால் லாபம் வரும். ஆன்மீகப் பணிக்கென்று ஒரு தொகையைச் செலவிடுவீர்கள்.

கேதுவிற்கு விநாயகரையும், ராகுவிற்கு துர்க்கையையும் வழிபடுவது துயரங்களைப் போக்கும்.

**அஷ்டமத்து குருவின் ஆதிக்க காலம்**

2.9.2017இல் உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கிறார். 8இல் குரு வரும்பொழுது எச்சரிக்கை தேவை. விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும், நாடுமாற்றங்களும் எதிர்பாராமல் வந்து சேரும். பையில் வைத்த பணம் மறுநிமிடமே செலவாகிவிடும். குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தைரியமும், தன்னம்பிக்கையும் தேவை. குடும்பத்தில் மூன்றாம் நபரின் சேர்க்கையால் இடர்பாடுகள் உருவாகலாம்.

குருவின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. வரவு, செலவு திருப்திகரமாக இருக்கும். வாய்ப்புகள் வந்தாலும் அதிக முயற்சி எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலக, மலைமேல் இருக்கும் குமரனையும், குருவையும் வழிபாடு செய்ய வேண்டும்.

8இல் சஞ்சரிக்கும் குரு திட்டமிட்ட காரியத்தை திறம்படச் செய்ய வைக்குமா? என்பது சந்தேகம் தான். பெட்டியில் எவ்வளவு பணம் வைத்தாலும், குடும்பத் தேவைகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எந்தவொரு வேலையையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிக்க இயலாது. ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி வருகிறதே என்று அங்கலாய்த்துக் கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கின்றதே என்று வேறு உத்தியோகத்திற்கு செல்ல முயற்சிப்பீர்கள். ஆனால் எங்கு சென்றாலும் இதே கதைதான் நடக்கும். இதுபோன்ற காலங்களில் உங்கள் சுயஜாதகங்களையும் புரட்டிப் பார்த்துக் கொள்வது நல்லது. தெசாபுத்தி பலம் பெற்றிருந்தால் கவலைப்படத் தேவையில்லை.

சிவாலயத்திற்குச் சென்று குரு தட்சிணாமூர்த்தியை அர்ச்சனை செய்து வழிபட்டு வருவதன் மூலமும், மஞ்சள் வண்ண வஸ்திரத்தைத் தானம் கொடுப்பதன் மூலமும் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் 16.12.2017இல் கர்ம ஸ்தானம் என்னும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பெற்றோரின் உடல் நலத்தில் அக்கறை தேவை. தொழில் ஸ்தானம் பலப்படுவதால் தொழில் வளர்ச்சி கூடும். பெயர்ச்சிக்கு ஒருசில மாதங்களுக்கு முன்னதாகவே நல்ல பலன்கள் உண்டாகும். வன்னி மரத்தடி சனீஸ்வரரை வழிபட்டால் வளம் பெறலாம்.

மந்தன்எனப்படும்சனிபகவான்உங்கள இராசிக்கு லாப ஸ்தானத்திற்கும், விரய ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். எனவே லாபமும் விரயமும் சரிசமமாக இருக்கும். அதேநேரத்தில் பிறருடைய பெயரில் தொழில் நடத்தினால் அவர்களுக்குரிய பலா பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். அவர்களுக்கு யோக திசை நடந்தால் தொழிலில் லாபம் குவியும். தோஷமுள்ள கிரகங்களின் திசை நடந்தால் விரயங்கள் கூடும். எனவே குடும்பத்தில் உள்ளவர்களில் தொழிலுக்கு அதிர்ஷ்டம் தரும் ஜாதகம் யாருக்கு இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அவர்களின் பேரில் தொழிலை மாற்றம் செய்வதோ அல்லது ஏற்று நடத்துவதோ நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 18.4.2017 வரை) நன்மைகள் ஏற்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பிவந்து சேருவர்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை) அரசியலில் கொடிகட்டிப் பறப்பீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள்.

குரு வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) தொழில் மாற்றங்களைப் பற்றிச் சிந்திப்பீர்கள். வளர்ச்சிக்கு மாற்று இனத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும்.

சனி வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 6.8.2017 வரை) புதிய நண்பர்களின் தொடர்பால் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். வெளிநாட்டுப் பயணம் எண்ணியபடியே வந்து சேரும். நீங்கள் எண்ணியதை, உங்கள் நண்பர்கள் எளிதில் முடித்துக் கொடுப்பர். வீடுவாங்கும் முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். பெற்றோர்களின் பிறந்த நாளை கொண்டாடி மகிழ்வீர்கள். சகோதரர்களுடன் இணக்கம் ஏற்படும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

குடும்பத்தில் அமைதி கூடவும், குழப்பங்கள் தீரவும் குரு தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள். நெய் விளக்கு ஏற்றினால் நினைத்தது நடக்கும். பஞ்சம ராகு, 11இல் கேதுவும் வரப்போவதால் புதுக்கோட்டை மாவட்டம் பில்லமங்கலத்தில், வடக்கு நோக்கி வீற்றிருந்து அருள்வழங்கும் பொன்னழகி அம்மனை வழிபட்டு புதிய பாதையை அமைத்துக் கொள்ளுங்கள்.

# சிந்தித்து செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்!

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலையே உருவாகிறது. பிறக்கும் புத்தாண்டு சூரியனுக்குரிய ஆண்டாக இருப்பதால், உங்கள் சுய ஜாதகத்தில் சூரியனுக்குரிய பாதசார பலமறிந்து காரியங்களைச் செய்தால் வெற்றி கிடைக்கும்.

**புத்தாண்டின் தொடக்கம்**

புத்தாண்டு தொடங்கும் பொழுது குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. குருபகவான் புத்தாண்டின் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து பரிபூரண பார்வையை உங்கள் இராசியின் மீது பதிப்பதால், ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் அதிகமாகவே நடைபெறப் போகிறது. பிரபல ஸ்தர்களின் உதவி கிடைக்கும்.

ஆண்டின் தொடக்கத்தில் 6இல் ராகுவும், 12இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். கேதுவுடன் செவ்வாய், சுக்ரன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். 9இல் சஞ்சரிக்கும் சனியோடு புதன் கூடியிருக்கிறார். 10இல் சூரியனும், 11இல் சந்திரனும் அமர ஆண்டு தொடங்குகிறது.

புத்தாண்டில் செவ்வாய்-சனி பரிவர்த்தனையும் குரு,சந்திர யோகமும் இருக்கிறது. உங்கள் இராசிநாதன் யோகாதிபதியாக உலா வருவதால் தேகநலன் சீராகும். செல்வ வளமும் பெருகும்.

இந்த ஆண்டு ராகு, கேது, குரு, சனி ஆகிய பெரும் கிரகங்கள் எல்லாம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

**ஆண்டின் தொடக்கத்தில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரப் போகிறது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்க, நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பெற்றோர் வழிப் பிரச்சினைகள் அகலும். உங்கள் சொல்லுக்கு குடும்பத்தினர் மதிப்புக் கொடுப்பர். தொழில் தொடங்க நினைக்கும் பொழுது, உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு. குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழிலில் கூடுதல் கவனம் தேவை. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட தூரத்திற்கு மாறுதலாகிச் செல்லும் வாய்ப்புக் கிட்டும். சர்ப்ப விநாயகர் படத்தை வைத்து வழிபட்டால் நல்ல பலன்களை நாளும் வரவழைத்துக் கொள்ளலாம்.**

(முற்றும்)

# 'இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டமைப்பு'

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாண அரசு அமைச்சுக்களுடன் இணைந்து "இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டமைப்பு" என்ற சர்வதேச உயர்நிலை மாநாடு கனடாவில நடைபெறவுள்ளது.

நிறைவானதும், நிலையானதுமான வேலைத்திட்டங்களைக் கையாண்டு தாயகத்தில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தை 21ஆம் நூற்றாண்டின் உலகப் பொருளாதாரத்தோடு இணைத்துச் செல்லவும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி மற்றும் சுகாதாரக் கட்டமைப்பில் ஒரு வலுவான அடித்தளத்தை மீளக்கட்டுவதற்கு வழிகோலும் வகையிலும் இம் மூன்று நாள் மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்காபரோவிலுள்ள உயர் கல்வி நிலையமான Centennial Collegeஇல் இம் மாதம் 15, 16, 17ஆம் திகதிகளில் மாநாடு நடைபெறவுள்ளது.

இம் மூன்று நாட்களும் தமிழர் தாயகத்தின் பொருளாதார, கல்வி மற்றும் சுகாதாரக் கட்டமைப்புக்களின் நிலை மற்றும் தேவைகள் என்பன வடக்கு கிழக்கு மாகாண அரசுகளின் கல்வி, சுகாதார அமைச்சர்கள், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் தாயகத்தின் துறைசார் வல்லுநர்களால் முன்வைக்கப்படும். புலம்பெயர் தமிழ் அறிவியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள், சர்வதேச தொழில்நுட்ப நிபுணர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்று, வடக்கு கிழக்கு மாகாணங்களின் தேவைகளை ஆழமாக ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளையும் செயற்றிட்டங்களையும் முன்மொழிவர்.

அத்துடன், திட்டங்களை நிறைவேற்ற வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுக்களுக்கு உதவும் வண்ணம் புலம்பெயர் தேசங்களில் உள்ள சர்வதேச அறிவுசார் வல்லுநர்களையும், தொழில் முனைவர்களையும் கொண்ட மீள்கட்டமைப்பு ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்படும்.

கனேடியத் தமிழர் பேரவை (CTC) ஒழுங்கமைக்கும் இந்த சர்வதேச மாநாட்டினை நடத்துவதற்கு கனேடியத் தமிழர் மருத்துவ சங்கம் (CTMA), சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (IHMO), தமிழ் மருத்துவ அறிஞர் நிறுவனம்-பிரித்தானியா (MIOT-UK), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - கனடா (TNA-Canada), கனடாவின் சில முக்கிய கல்விச்சபைகள் மற்றும் பல தமிழ் அமைப்புக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குகின்றன.

இந்த சர்வதேச மாநாட்டிற்கான ஆலோசனைகளை அமெரிக்க தலைநகரான Washington D.C.யில் அமைந்துள்ள துரைசிங்கம் நிறுவனம் (Thuraisingham & Associates) வழங்கி உதவுகிறது. (இ-3)

# க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறு-2017

**யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**

**வர்த்தப்பிரிவு**

த.தலைக்சன்-3ஏ, ம.அஜந்தன்-3ஏ,உ.உசாந்தன்-3ஏ

**கலைப்பிரிவு**

க.பிரகான்-2ஏபி, ச.அனுசாந்-2ஏபி,ந.கோபினியா-2ஏபி,சி.யோகதாஸ்-2ஏசி, பொ.தீபன்-2ஏசி, ஜெ.சஞ்சிதா-2ஏசி,த.மதுசா-2ஏஎஸ், ஜெ.கலிஸ்ரா- ஏ2பி ,செ.கஸ்தூரி-ஏபிசி,ரா.சேந்தினி-ஏபிசி, ர.சுஜிந்தன்-ஏபிஎஸ்.

**யா/விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்**

**கணிதப்பிரிவு**

ப.டிலக்ஷனா-2ஏபி, ஜெனஜலன்-ஏ2பி,தி.வேணுராஜ்-ஏ2பி,ச.கௌசி-ஏபிசி, தி.அனோஜன்-ஏ2சி.

**உயிரியல் பிரிவு**

இ.கார்த்திகாயினி-பி2சி, பா.மிதுஷா-ஏ2சி,ச.சாமினி-ஏசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

சு.சுதர்ஷினி-3ஏ, வவனிதா-3ஏ, சி.சேந்தன்-3ஏ, க.சயந்தன்-ஏ2பி,சி.மஜிந்தா-ஏபிசி, செ.சிவரஞ்சி-ஏபிசி, ச.சிவானந்தி-ஏபிசி.

**கலைப்பிரிவு**

வி.தர்ஷினி-3ஏ, து.சுதர்ஷன்-ஏ2பி,பா.சிந்துயா-ஏபிசி.

**யா/வரணி மத்திய கல்லூரி**

**கலைப்பிரிவு**

ஜி.சௌந்தர்யா-2ஏபி, என். பிரபாகர்- 2ஏசி, ஜே. சோபிதா-ஏ2பி, ஆர். நிந்துசாயினி-ஏபிசி, கே. கீர்த்தனா-ஏபிசி, எஸ்.ரசிந்தாயினி-ஏபிசி

**கணிதப்பிரிவு**

கே.நந்தகோகுலன்-சி2எஸ், கே.தனுசன்-ஏபிசி, பி. கபிலன்-3பி

**வர்த்தகப்பிரிவு**

வி.கபிலன்-2ஏபி, ஜி.சாருஜன்-3பி,கே.வினோஜா-ஏபிசி.

**யா/தேவரையாளி இந்துக்கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

சி.பிராந்திகா- 3ஏ, யோ. கிருஷா-3ஏ, ஜெ.சஜிந்தன் ஏபிஎஸ்.

**கலைப்பிரிவு**

வி.சிவதேவினி 2ஏசி, ர.ரதீஷன்-ஏபிசி, சி. பிரியங்கன்-ஏ2சி.

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

அ.மேரி நிசோதா-பி2சி, ந.பாமினி-பி2சி, இ. கிருத்திகா-3சி,பா.மதுஷா-3சி.

**யா/வைத்தீஸ்வரா கல்லூரி**

**கலைப்பிரிவு**

நூ.ஜபீர்-3ஏ, தி.திலக்சன்-2பிசி, வி.மேரிஸ்ரெலா-பி2சி, ப.சிவாசாந்தன்-பி2சி

**வர்த்தகப்பிரிவு**

க.சாரங்கன்-ஏ2சி, றி. பாத்திமாறுசைக்கா-3பி, இ.விதுசன்-2பிசி,பா.கிஷாந்-2பிசி, ஸ்ரீ.கஜீவன்-2ஏசி

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## பொற்றிலைக் கையாந்தகரை அல்லது பொற்றிலைப் பாவை அல்லது மஞ்சள் கரிசாலை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name: Eclipta prostrata
English Name: Bhangra
Sinhala Name: Ajagara
Family Name: Compositae

எதிரடுக்கில் அமைந்த மஞ்சள் நிறமலர்களையுடைய மிகக்குறுஞ்செடியினம். தரையோடும் படர்ந்தும் வளர்வதுண்டு. குத்து உரோமங்கள் கொண்ட ஒரு செடியாகும். இது ஓராண்டுத் தாவரமாகும். இதன் இலைக்ள் தனியிலைகள், எதிர் எதிராக தண்டில் இலைகள் அடுக்கப்பட்டிருக்கும். இலைகள் 2.5-6.2 செ.மீ. நீளமுடையவை. இதன் அகலம் 0.5-1.7 செ.மீ.உடையது. இதன் பூக்கள் இருபாலானவை. மகரந்த மணிகள் 4 காணப்படும். பூக்கள் ஜனவரி- மே மாதம் வரையும் பூத்து நவம்பர் மாதத்திலும் பூக்கும். 4-5 மடல் கொண்டிருக்கும். பூவடி இதழ், அடுக்குத் தட்டு மணிவடிவமானது. இது வித்து மூலமும் கட்டிங் (Cutting) மூலமும் இனப்பெருக்கம் செய்யும்.

கரிசாலை எனும் தாவரத்தில் நான்கு இனங்கள் உண்டு. இவற்றில் நீலம், மஞ் சள், சிவப்பு, வெள்ளை இனங்கள் காணப்படுகின் றன.

மஞ்சள் நிறமான கரிசாலையை மஞ்சள் கரிசாலை அல்லது பொற் றிலை கையாந்த கரை அல் லது பொற்றிலைப் பாவை என அழைக்கப்படுகிறது.

இந்த மஞ்சள் கரிசாலையானது பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது.

இதன் மருத்துவக் குணங்களை பற்றி பார்க்கப் போனால் கரிசலாங்கண்ணி கீரைச்சாற்றில் திப்பிலியை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் காலையில் இரண்டு கிராம் அளவுக்கு சாப்பிட்டால் மூச்சுக்கஷ்டம், ஆஸ்துமா குணமாகும்.

இதனை சாறாக்கி அதிமதுரத்தை ஊறவைத்து பொடியாக்கி தினமும் காலையில், மாலையில் தேனில் குழைத்து சாப்பிட்டால் இருமல் தீரும். பொற்றிலைக் கையாந்தகரைச் சாற்றையும் பருப்புக் கீரையையும் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டால் ஆரம்ப நிலை புற்று நோய் குணமாகும். பொற்றிலை கரிசாலைச் சாறில் நல்லெண்ணெயைக் கலந்து வாய் கொப்பளித்தால் வாய்ப் புண் குணமாகும். கரிசலாங்கண்ணி சாறு எடுத்து அதிகாலை ஒரு அவுண்ஸ் 48 நாட்களுக்கு தொடர்ந்து குடித்தால் பித்தப்பையிலுள்ள கற்கள் கரையும். பொற்றிலைக்கையாந்தகரை கீரையுடன் மிளகு போட்டு அவித்துச் சாப்பிட்டால் கல்லீரல் வீக்கம் குணமாகும். கரிசலாங்கண்ணிக் கீரையுடன் இரண்டு கடுக்காயைத் தட்டி கஷாயம் வைத்துக் குடித்தால் மலச்சிக்கல் குணமாகும்.

மஞ்சள் கரிசாலையை கீழ்காய் நெல்லியுடன் சம அளவு எடுத்து அதில் மஞ்சள் தூள் 2 தேக்கரண்டி கலந்து அதிகாலையில் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை குணமாகும். கீரையாக சமைத்து சாப்பிட்டால் தொந்தி கரையும். மஞ்சள் கரிசாலையை தும்பை இலை சேர்த்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை குணமாகும். கரிசாலைச் சாற்றை எள் நெய்யை 1 லீற்றர் கலந்து அதிமதுரம், திப்பிலி சேர்த்து சாப்பிட்டு வர சுவாச ரோகங்கள் தீரும். தூய்மையான வெள்ளைத் துணியில் கரிசாலைச் சாறு விட்டு உலர்த்தி இதனை எரித்து சாம்பலாக்கி இச்சாம்பலை ஆமணக்கு எண்ணெயில் மத்தித்து கண்ணில் தீட்ட கண் ஒளி பெறும். இது சிறந்த கண்மையாகும். இதனால் கண்நோய்கள் வரவிடாமல் தடுப்பதுடன் கண்களை குளிர்மையாக வைத்திருக்க உதவும். மஞ்சள் கரிசாலையை மிளகு, சோம்பு சேர்த்து கஷாயம் வைத்து குடித்தால் தலைவலி குணமாகும்.

பொற்றிலைக் கையாந்தகரையை வெள்ளைக் கரிசாலையுடன் சேர்த்து கூட்டுக் கறி சேர்த்து சாப்பிட்டால் உடலிலுள்ள வெண்புள்ளிகள் மறையும். இதனை காலை, மாலை இருவேளையும் குடித்து வந்தால் சிறுநீரில் இரத்தம் வருவது நிற்கும். இதனைச் சாறாக்கி மோரில் கலந்து கொடுக்க பாம்புக்கடி விடம் குறையும்.

100 ஆண்டு போன வேப்பம் பட்டையை உலர்த்தி சூரணத்தை ஒருமுறை பொற்றிலைக் கையாந்தகரை சாற்றில் ஊறவைத்து உலர்த்திய பொடியை 5 கிராம் அளவு சாப்பிட 48-144 நாளில் 18 வகை குட்டநோயும் குணமாகும். எள்நெய் அல்லது தேங்காய் எண்ணெயில் இதன் இலையை அரைத்து போட்டு சூரிய ஒளியில் 8 நாட்கள் புடமிட்டு வடித்து தலைக்கு தேய் க்க முடி வளரும்.

கையாந்தகரைச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் இவற்றைக் கலந்து அதிமதுரம் சேர்த்து குழப்பி, எரித்து பதமாய் வடித்துத் தலைமுழுக கண்காசம், காது நோய்கள் தீரும். கரிசலாங்கண்ணிச் சாறு ஒருபங்கும் ஆமணக்குநெய் கலந்து கொஞ்சம் வெள்ளைப்பூண்டு சேர்த்து எரித்து பதத்தில் வடித்துக் கொண்டு கொடுக்க குட்டம், காமாலை நீங்கும். கரிசலாங்கண்ணிச்சாறை தேனில் கலந்து கொடுக்க ஜலதோஷம் நீங்கும். இலையை அரைத்து கற்கம் பண்ணி தேள்கடிக்கு கடித்த இடத்தில் நன்றாக தேய்த்து அதைப் போல அவ்விடத்தில் வைத்துக் கட்டினால் நஞ்சு நீங்கும். இலையை வேக வைத்தாலான ஆவியை மூல நோய்க்கு பிடிக்க தீரும்.



# சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 50 பேர் கொன்று குவிப்பு

## துருக்கி இராணுவம் அதிரடி

**(பெய்ரூட்)**
**சிரியாவில் கடந்த 24 மணி நேரத்தில் துருக்கி இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.**

சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை ஒடுக்க கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அயல் நாடான துருக்கி கடந்த 4 மாதங்களுக்கு முன் அதிரடித் தாக்குதலை தொடர்ந்தது. அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான்வழியாகவும் தாக்குதல் நடத்தும் துருக்கி இராணுவம், சிரியாவில் துருக்கியின் எல்லையையொட்டி அமைந்துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக இடைவிடாத தாக்குதலை நடத்தி வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் துருக்கி இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

அவர்களது முகாம்கள், ஆயுதக்கிடங்குகள் உள்ளிட்ட ஏராளமான கட்டடங்கள் அழிக்கப்பட்டன. (இ-7)

# கிளர்ச்சியாளர்களுடன் எல்லாம் விவாதிக்க தயாராக உள்ளோம்

## சிரிய ஜனாதிபதி ஆசாத் அறிவிப்பு



(டமாஸ்கஸ்)
கிளர்ச்சியாளர்களுடன் எலலாவற்றை குறித்தும் விவாதிக்கத் தயாராக உள்ளதாக சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கும் இடையே கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் திகதி உள்நாட்டுப்போர் தொடங்கியது.

தொடர்ந்து 6 ஆவது ஆண்டாக நடைபெற்றுவரும் இந்த உள்நாட்டுப் போரில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இதில் ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரசுப் படைக்கு ஆதரவாக ரஷ்ய இராணுவப் படைகள் வான் வெளித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவும் அவ்வப்போது எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யா, துருக்கி ஆதரவுடன் இரு தரப்புக்கும் இடையே கடந்த திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. போராளி குழுக்கள் மற்றும் சிரியா அரசு பிரதிநிதிகளிடையே இந்த மாதம் கஜகஸ்தான் நாட்டில் சமாதான பேச்சுவார்த்தை நடத்தவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.


இந்நிலையில் கிளர்ச்சியாளர்களுடன் எல்லாவற்றை குறித்தும் விவாதிக்கத் தயாராக உள்ளதாக சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆசாத் கூறுகையில், "கஜகஸ்தானில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் எதிர்த்தரப்பினர் சார்பில் யார் பிரதிநிதியாக வருகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அதேபோல் பேச்சுவார்த்தையை எப்போது நடத்துவது என்பதும் முடிவு செய்யப்படவில்லை. திகதி முடிவான உடன் அஸ்டானா செல்வதற்கு அரசு தரப்பு குழு தயாராக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்க ஜனாதிபதி பதவி குடும்ப வர்த்தகம் அல்ல

## ட்ரம்புக்கு ஒபாமா அறிவுரை



குடும்ப வர்த்தகத்தை நடத்துவது போல் நாட்டை வழிநடத்த முயற்சிக்க வேண்டாம் என்று அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவுரை வழங்கியுள்ளார்.

ட்ரம்ப் அமெரிக்க நிர்வாக கட்டமைப்பை மதிக்க வேண்டும் என்றும் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஒபாமா வலியுறுத்தியிருந்தார்.

"நீங்கள் பதவிப்பிரமாணம் செய்த பின்னர் உலகின் மிகப்பெரிய நிர்வாகத்திற்கு பொறுப்புதாரி" என்றும் ஒபாமா அந்தப் பேட்டியில் ட்ரம்பிடம் தெரிவித்தார். அரசுக்கும் தொழில் நிறுவனத்திற்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

கணனி வழி ஊடுருவல்கள் மற்றும் தவறான தகவல்கள் ஜனநாயகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை தான் குறைத்து மதிப்பிட்டு விட்டதாக ஒபாமா இதன்போது கருத்து தெரிவித்துள்ளார்.

தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற ஒரு விரிவான கணனி வழி ஊடுருவல்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தானாகவே உத்தரவு பிறப்பித்ததாக அமெரிக்க புலனாய்வு அமைப்பானது முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தது.

ரஷ்ய ஜனாதிபதி புடினை குறைவாக மதிப்பிடவில்லை என்றும், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ரஷ்யாவின் தலையீடு இருந்தது என்றும் ஒபாமா ஒப்புக்கொண்டுள்ளார். (இ-7)

# ஈரான் முன்னாள் ஜனாதிபதி ஹசெமி ரஃப்சன்ஜனி காலமானார்



(தெஹ்ரான்)
ஈரான் முன்னாள் ஜனாதிபதி அக்பர் ஹசெமி ரஃப்சன்ஜனி காலமானார். அவருக்கு வயது 82. உடல்நலக் குறைவு காரணமாக தலைநகர் தெஹ்ரானின் வடக்கு பகுதியில் உள்ள பொது வைத்தியசாலை ஒன்றில் நேற்றுக் காலை அவர் சேர்க்கப்பட்டு இருந்தார். இதனையடுத்து சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது.

ரஃப்சன்ஜனி ஈரான் நாட்டு ஜனாதிபதி 1989 முதல் 1997 வரை பதவி வகித்தார். ஈரான் நாட்டு அரசியலில் முக்கிய பங்காற்றியுள்ளார். பல்வேறு தருணங்களில் அரசியல் தளத்தில் கிங் மேக்கராக இருந்தவர்.

மாரடைப்பு காரணமாக ரஃப்சன்ஜனி உயிரிழந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. வைத்தியசாலையில் ரஃப்சன்ஜனி உயிரிழந்ததை அவரது உறவினர்கள் உறுதி செய்தனர். (இ-7)

# தெற்காசியாவில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு

## எச்சரிக்கை விடுக்கும் ஆய்வாளர்கள்

இந்தியப் பெருங்கடலின் அடிப்பகுதியில் புதிதாக ஏற்பட்டுள்ள பாறை அடுக்கால் தெற்காசியப் பகுதிகளில் பெருமளவு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேசிய அறிவியல் நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஆய்வினை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் அந்தமான் மற்றும் இந்தோனேசியாவின் சுமத்திரா பகுதிகளில் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்திய பெருங்கடலின் ஆழத்தில் பாறை நகர்வு ஏற்பட்டது.

இந்த பாறை நகர்வால் இந்தியப் பெருங்கடல் பகுதியின் ஆழத்தில் புதிய பாறை அடுக்கு உருவாகியுள்ளது.

இதனால் ஏற்கனவே உள்ள பாறை அடுக்குடன், புதிய பாறை அடுக்கும் மோதுவதால் எதிர்காலத்தில் மிகப்பெரிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெள்ளை மாளிகையில் கூட மருமகனுக்கு முக்கிய பதவி வழங்கிய டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தனது மருமகனுக்கு ஆட்சியில் முக்கிய பதவி வழங்கியுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் மகளான இவான்காவின் கணவர் Jared Kushner (வயது-35) என்பவருக்கு தான் வெள்ளை மாளிகையில் பதவி வழங்கப்பட்டுள்ளது.


சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களை கையாளவும் மத்திய கிழக்கு ஆசிய விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கவும் தலைமை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரம்பின் பதவியேற்பு நிகழ்ச்சியின்போது அமெரிக்க சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என உறுதிமொழி ஏற்ற பிறகு ஜார்ட் குஷ்னர் பதவியேற்கவுள்ளார். இந்தப் பதவியை ஏற்க அமெரிக்க செனட்டின் ஒப்புதல் பெறுவது அவசியமில்லை.

ட்ரம்பின் மகளான இவான்கா அதிகார பூர்வமான ஆலோசகராக இல்லாவிட்டாலும், அவரது தந்தைக்கு நம்பத்தகுந்த ஆலோசகராக செயற்படுவார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் வெள்ளை மாளிகை பதவிகள் குடும்ப உறுப்பினர்களுக்காக இருக்கக்கூடாது என ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ள நிலையில தற்போது ட்ரம்பின் மருமகனுக்கு முக்கிய பதவி வழங்கியுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-3)

# தாய்லாந்தில் கனமழையால் 20 பேர் பலி! 7 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு







தாய்லாந்தின் தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வார மாக பெய்த கனமழையால் 20 பேர பலியாகி உள்ளனர். சுமார் 7 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிகப்பட்டுள்ளனர்.

தாய்லாந்தின் தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. 1000இற்கும் மேற்பட்ட கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளதால் சுமார் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த கனமழைக்கு 20 பேர் பலியாகி உள்ளனர். வீதிகள் ஆறுபோல் காட்சி அளிக்கின்றன. விவசாய நிலங்கள் நீரில் முற்றிலும் மூழ்கியுள்ளன. பெரும்பாலான இடங்களில் வீட்டின் முதல் மாடி வரை வெள்ளம் சூழ்ந்துள்ளது. 1500 பாடசாலைகள் சேதம் அடைந்துள்ளன.

குறிப்பாக நகோன் ஷிதம்மராட் மாகாணம்தான் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு இராணுவ ஹெலிகொப்டர் மூலம் வீட்டில் சிக்கியுள்ளவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மீட்பு நடவடிக்கைகள் துரித முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "இந்த சூழ்நிலையில் இன்னும் மிகவும் மோசமாக கன மழை நீடிக்கும்" என்று அந்நாட்டு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பொதுவாக தாய்லாந்தில் நவம்பர் மாதம் முதல் ஜனவரி வரை வறண்ட மற்றும் குளிர்ந்த வானிலையே நிலவும். இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக கனமழை பெய்துள்ளது. (இ-7)

## முதல்வரை ஓரங்கட்டும் சசிகலா




முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தை அமைச்சர் என்று சசிகலா அழைப்பதால் இது அவரது ஆதரவாளர்கள் மத்தியில கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அ.தி.மு.க. அமைச்சர்களை சந்தித்து பேசும் சசிகலா, அமைச்சர் பெருமக் களே என அழைக்கிறார். அங்கு முதல்வர் பன்னீர்செல்வம் இருந்தாலும் அவரை முதல்வர்என்அவர் அழைப்பதிலலை.

பன்னீர்செல்வத்தின் உண்மையான விசுவாசம் காரணமாகவே அவருக்கு முதல்வர் பதவியை ஜெயலலிதா கொடுத்தார். எம்.ஜி. ஆரும் ஜெயலலிதாவும் வளர்த்த கட்சி தன்னால் பிரிந்து விடக்கூடாது என்ற காரணத்தினாலேயே பன்னீர்செல்வம் அமைதியாக இருந்து வருகிறார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கட்சியில் ஒரு சிலர் பன்னீர்செல்வத்துக்கு மரியாதை கொடுக்காமல் இருப்பது அவரது ஆதரவாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

## மோடியின் விளம்பர பதாகைகளை அகற்ற தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் புகார்



தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் மோடியின் விளம்பர பதாகைகளை அகற்ற தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் புகார் மனு அளித்துள்ளது.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், கோவா, உத்தரகாண்ட், மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களுக்கு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயலாளர் கே.சி.மிட்டல் தேர்தல் ஆணையத்திடம் ஒரு புகார்மனு அளித்தார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி 5 மாநில முதலமைச்சர்கள் விளம்பர பதாகைகள் உடனடியாக அகற்றப்பட்டன. ஆனால் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படம் அடங்கிய விளம்பர பதாகைகள் பெற்றோல் பங்குகள், ஹாஸ் நிறுவனங்கள் உட்பட பல்வேறு இடங்களில் பொதுமக்கள் பார்வையில் படும்படி இன்னமும் உள்ளன. மத்திய அரசு விளம்பரங்களிலும் மோடி படத்துடன் கூடிய விளம்பர பதாகைகள் பொது இடங்களில் வைக்கப்பட்டு இருக்கின்றன. எனவே தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் மோடியின் விளம்பர பதாகைகளை உடனடியாக அகற்ற தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தலை நேர்மையாகவும், ஒளிவு மறைவு இன்றியும் நடத்த முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஆங்கிலம் வாசித்த முதல்வர் ஓ.பி.எஸ்.

### அவமானப்படுத்திய சசிகலா

(சென்னை)


சென்னையில் இந்தியா ருடே பத்திரிகை நடத்திய தென்னக மாநாட்டில் கலந்து கொண்ட முதல்வர் பன்னீர் செல்வம் மற்றும் சசிகலா ஆகிய இருவரும் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர்.

விழா தொடங்கிய பின்னர், முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ஆங்கிலத்தில் தன் உரையை வாசித்தார். அப்போது சசிகலா அங்கிருந்து வெளியேறினார்.

தலைமைக் கழகத்தில் அவசர வேலையாக அவர் புறப்பட்டதாக காரணம் கூறப்பட்டாலும், தன் கட்சியை சேர்ந்த ஒரு முதல்வர் பேசிக் கொண்டிருக்கும்போது பாதியிலேயே அவர் எழுந்து சென்றது நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ்வாறு சசிகலா நடந்துகொண்டது, முதல்வர் பன்னீர்செல்வத்தை அவமதிக்கும் ஒன்று என அவரது ஆதரவாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.(இ-7)

## மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் தி.மு.க. செயற்படும் - ஸ்டாலின்



கடந்த முறை ஏமாந்து போன மக்களின் எதிர்பார்ப்புகள் தி.மு.க. பக்கம் திரும்பியுள்ளதால் அதனை நிறைவேற்றும் வகையில் தங்களது செயற்பாடுகள் இருக்கும் என அக்கட்சியின் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தி.மு.க. தொண்டர்களுக்கு நேற்று அவர் எழுதிய கடிதத்தில்,

"தி.மு.க. செயல் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் தினமும் வாழ்த்துகள் குவிந்த வண்ணம் உள்ளன. அரசியலுக்கு அப்பாற்பட்டு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், முன்னணி நிர்வாகிகள் நேரிலும், தொலைபேசியிலும் வாழ்த்துகள் தெரிவித்து வருகின்றனர். இதன் தனிப்பட்ட எனக்கான வாழ்த்தாக கருதாமல் தமிழர்களின் பண்பாடாகவே கருதுகிறேன்.

அருகி வரும் பண்பாட்டை மீட்டெடுக்கும் வகையில் வெளிப்பட்ட வாழ்த்துகளுக்கு நெஞ்சார்த்த நன்றிகள். அரசியல் வேறுபாடுகளைக் கடந்து நட்பும், நல்லுறவும் என்றென்றும் தொடரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆரோக்கியமான அரசியலை முன்னெடுக்கவும், தமிழகத்தின் பொதுப் பிரச்சினைகளில் மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றவும் இத்தகைய வாழ்த்துக்கள் வலிமை சேர்க்கும் என நம்புகிறேன்.

அறிஞர்கள், கவிஞர்கள், சான்றோர்கள், ஊடகத்துறையினர், சமூகநல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என நாட்டு நலனில் அக்கறை கொண்ட பலரும் உள்ளார்ந்த அன்புடன் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் செயற்படுவேன் என உறுதியளிக்கிறேன் என்று ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வதேச நீதிபதிகளுக்கான தேவையை வலுப்படுத்தும் இலங்கையின் 'நள்ளிரவு' நீதி

## நாடு கடந்த தமிழீழ அரசு அறிக்கை



இலங்கையின் நீதித் துறையும் அரசும் இனம்சாரா நடுநிலைத்தன்மை கொண்டவையல்ல. போர்க்குற்றங்களுக்கும் மானிட விரோதக் குற்றங்களுக்கும் இனக் கொலைக்கும் இலக்காகிப் பாதிப்புற்ற ஏராளமான தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய அவற்றால் இயலாது என்று, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜின் கொல்லயில் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் அனைவரையும் கடந்த 2016 டிசெம்பர் 24 ஆம் திகதி இலங்கையின் நீதிமன்றம் விடுவித்துள்ளது. ரவிராஜ் எம்.பி. 2006 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி ஊர்தியில் பணிக்குச் சென்று கொண்டிருந்த போது படுகொலை செய்யப்பட்டார். கொழும்பு நகர் மையப்பகுதியில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத்துறை நிறுவனங்கள் பலவற்றுக்கும் கூப்பிடு தொலைவில் பட்டப்பகலில் கொலைகாரர்கள் அவர் வண்டியின் மீது சுட்டார்கள்.

ரவிராஜ் படுகொலைக்காக 2015 நவம்பர் 3ஆம் திகதி கடற்படையினர் மூவர் உட்பட அறுவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள். 2016 டிசெம்பர் 24ஆம் திகதி ஒரு சிங்கள நீதிபதியும் சிங்கள சான்றாயர் குழுவும் அனைத்து எதிரிகளையும் விடுவித்தனர்.

இவ்வழக்கில் நீதிபதியான மணிலால் வைத்திய திலக சான்றாயத்தில் சிங்கள இனத்தவர் மட்டுமே இடம் பெற வேண்டும் என்ற எதிர்த்தரப்பு வேண்டுகோளை ஏற்றுக் கொண்டிருந்தார்.

சான்றாயம் அமைப்பதில் இத்தகைய இனப் பாகுபாட்டுக் காரணங்களைப் பயன்படுத்தியிருப்பது இலங்கையின் வரலாற்றிலேயே இது தான் முதல்முறை.

எதிரிகளை அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்த சான்றாயர்கள் நள்ளிரவு கடந்த மௌன வேளையில் தமது தீர்ப்பை வழங்கினார்கள். இதுவும் கூட இலங்கையின் நீதித் துறை வரலாற்றில் முதல் முறைதான். இந்தத் தீர்ப்பிலிருந்து தெளிவாகத் தெரிவதுஎன்னவென்றால் இலங்கையின் நீதித் துறையும் அரசுமே கூட இனம்சாரா நடுநிலைத் தன்மை கொண்டவையல்ல.

போர்க்குற்றங்களுக்கும் மானிட விரோதக் குற்றங்களுக்கும் இனக்கொலைக்கும் இலக்காகிப் பாதிப்புற்ற ஏராளமான தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய அவற்றால் இயலாது.

கடந்த 2015 ஒக்டோபர் மாதம் இலங்கை அரசாங்கமே அயல்நாட்டு நீதிபதிகளின் பங்கேற்புடன் நிலைமாற்ற நீதிச் செயல்வழி கோரும் தீர்மானத்தை பிற அரசுகளுடன் சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் கூட்டாக முன்மொழிந்திருந்தது. இது விடயத்தில் இற்றை வரை இலங்கை அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை.

மாறாக, அது மனித உரிமைகள் ஆணையத்திற்கு அளித்த உறுதிகளை அப்பட்டமாக மறுதலித்து, அயல்நாட்டு நீதிபதிகள் யாரும் இடம் பெறப் போவதில்லை என அறிவித்துள்ளது. அரசியல் தலைவர்களுக்கு எதிராக எவ்வித வழக்கும் தொடுக்கப் போவதில்லை எனவும் கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் இதேபோன்ற வாக்குறுதிகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பே வழங்கியுள்ளார்.

இந்த நூற்றாண்டின் ஆகக் கொடிய குற்றங்கள் சிலவற்றுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்பாக இனியும் காத்திரமான பொறுப்புக் கூறல் பொறிமுறை இல்லாமற்போவது இக்குற்றங்களுக்கு இலக்காகிப் பாதிப்புற்ற தமிழ் மக்கள் தொடர்பான சிக்கல் மட்டுமல்லாது ஐ.நா. அதனது மனித உரிமை ஆணையம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் நேர்மை, நம்பகத்தன்மையின் மீது நேராகத் தாக்கங்கொள்வதாகும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மனிதவுரிமை ஆணையத்திடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாவது, எதிர்வரும் 2017 மார்ச் அமர்வில் இலங்கைக்கு மேலுமொரு நீட்டிப்பு வழங்குவதன் மூலம் பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு நீங்களும் உடந்தையாக இருந்து விடாதீர்கள் என்பதே. 2015 செப்டெம்பரில மனிதவுரிமைகளுக்கான உயர் ஆணையர் பரிந்துரைத்த இடைக்காலப் பன்னாட்டுத் தீர்ப்பாயம் அமைப்பதற்கான காலம் வெகுவாகக் கடந்துவிட்டதென்பதே உண்மை.

மனித உரிமை ஆணையம் ஏற்கனவே வட கொரியாவுக்குச்செய்ததுபோல இலங்கையையும் ஐ.நாவின் பொதுப் பேரவையின் பார்வைக்கு அனுப்ப வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் மீது மக்கள் கொண்டிருக்கக் கூடிய நம்பிக்கை நிலைத்திருப்பதற்கு அவ்வகை முரணற்ற உறுதிப்பாடு முக்கிய காரணியாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்

சீ.அமரஜோதி அவர்கள்

யாழ். பல்கலைக்கழகத்தினால் 11.01.2017
இன்று வழங்கப்படும் கல்வி முதுமாணி
பட்டத்தினை பெறுகின்றார் .அவரை
மேலும் கலாநிதிப் பட்டம் பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

*இசையில் உயர்ந்தவனே*
*பேச்சில் சிறந்தவனே*
*உள்ளத்தில் பரந்தவனே*
*பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.*



(அ-7182) யாழ்.விஞ்ஞான பீட சக மாணவர்கள்

## சீனாவிற்கு சென்ற நோக்கம் என்ன? மகிந்தவிடம் பிரதமர் ரணில் கேள்வி

(கொழும்பு)

அண்மையில் சீனாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் சீனா அண்மையில் மேற்கொண்ட முதலீடுகளுக்கு கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தி வருகின்ற மகிந்த ராஜபக்சஷ, சீனாவிற்கு விஜயம் மேற்கொணடு முதலீடுகளை வரவேற்றுளளதாக ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் முதலீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்தமைக்காக சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங்கிற்கு இலங்கை நன்றிக்கடன் பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் முதலீடு செய்யுமாறு ஏனைய நாடுகளிடமும் இலங்கை அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## சீன கைத்தொழில் வலயம் வேறு பகுதிக்கு மாற்றப்படும் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சீனாவின் கைத்தொழில் வலயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டால், அது நாட்டின் வேறு பகுதிக்கு மாற்றப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

"அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தை நாட்டின் இன்னொரு பகுதிக்கும் மாற்ற முடியும்.

அம்பாந்தோட்டையில் இதனை உருவாக்க முடியாது போனால், பொல நறுவையில் அதனை அமைப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

அமைச்சர்கள் லக்ஸ்மன் கிரியெல்லவும் எஸ்.பி.திஸாநாயக்கவும் இந்தக் கைத்தொழில் வலயத்தை கண்டி அல்லது நுவரெலியாவில் அமைக்குமாறு கோருகின்றனர்.

அமைச்சர் சாகல ரத்னநாயக்க தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர்கள் மகிந்த அமரவீர, சஜித் பிரேமதாச ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் பரிந்துரைக்கு அமையவே காணி சுவீகரிப்பு இடம்பெறும்.



இந்த கைத்தொழில் வலயம் தொடர்பான அத்தனை உடன்பாடுகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும். அதுகுறித்து விவாதம் நடத்தலாம் என்றும் தெரிவித்தார். (இ-3)

## கல்வியாளர்களுக்கான பாராட்டு விழாவில் தணிகாசலம்பிள்ளை கௌரவிக்கப்பட்டார்



இலங்கையில் விசேட திறமையுடன் கூடிய கல்விச் சேவையாற்றிய கல்வியாளர்களுக்கான பாராட்டுவிழாவில் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை கௌரவிக்கப்புட்டுள்ளார்.


கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் இலங்கை கல்வி நிர்வாக சேவை ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தினால் இலங்கையில் விசேட திறமையுடன் கூடிய கல்விச் சேவையாற்றிய கல்வியாளர்கள் 22 பேரை தெரிவு செய்து அவர்களுக்கான பாராட்டு விழாவினை கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி கொழும்பு தேசிய கல்வி நிறுவக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கல்வியாளர்களுக்கான கௌரவத்தினை வழங்கி வைத்தார்.

பாராட்டப்பட்ட 22 பேரில் ஒரேயொரு தமிழரான கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை சமகால ஓய்வு நிலை இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பு பதவி வகித்தவர்களில் முதுநிலையாளராவார். (இ-9)

# சமஷ்டி குறித்து தவறான கருத்து சிங்கள மக்களிடம் பரப்பப்படுகிறது

## விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு




(கொழும்பு)

**சமஷ்டி என்றாலே பிரிவினை என்ற தவறான கருத்து சிங்கள மக்கள் மத்தியில் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் பரப்பப்பட்டு வருவதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இரட்டை நகர உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு கனடாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டுள்ள வட மாகாண முதலமைச்சர் கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே இதனைத் தெரிவித்துளளார்.

சமஷ்டித் தீர்வை அரசாங்கம் நிராகரிக்கின்ற நிலையில் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த முதலமைசசர சமஷ்டி மூலம் ஒரே நாட்டிற்குள் எம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தரத் தீர்வு வேண்டுமென வலியுறுத்தினார்.(இ-3)

# இத்தாலிய நீர்மூழ்கி போர்க்கப்பல் இன்று கொழும்பு வருகிறது



இத்தாலிய கடற்படையின் பலநோக்கு ஐரோப்பிய போர்க்கப்பலான ITS Carabiniere நான்கு நாட்கள் பயணமாக இன்று கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளது.

லா ஸ்பெசியா துறைமுகத்தில் இருந்து கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி நான்கு மாதப் பயணத்தை ஆரம்பித்த இந்தப் போர்க்கப்பல், பாகிஸ்தானில் தரித்திருந்த நிலையில், இரண்டாவதாக கொழும்பு துறைமுகம் வரவுள்ளது.

. நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான, ITS Carabiniere, 2015 ஏப்ரலில் இத்தாலியக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.


பிந்திய தலைமுறை போர்த்தளபாடங்களும், இராணுவக் கருவிகளும் இந்தப் போர்க்கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன.

கடல் கடந்த பிராந்திய நாடுகளுடன், முக்கியமான பங்காளர்களுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்தும், திட்டத்தின் அடிப்படையிலேயே இத்தாலியப் போர்க்கப்பல் கொழும்பு வரவுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு, கண்காணிப்பு, ஒத்துழைப்பை வலுப்படுத்தல், மற்றும் கடற்படை இராஜதந்திரம் ஆகியவற்றை வலுப்படுத்துவதே, இந்தப் போர்க்கப்பலின் அடிப்படைச் செயற்பாடாகும்.

எதிர்வரும் 14ஆம் திகதி வரை கொழும்பில் தரித்து நிற்கும் போது, இலங்கை கடற்படையுடன் இணைந்து இத்தாலியப் போர்க்கப்பலின் மாலுமிகள் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர். (இ-3)

# சம்பந்தனுடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் அதுல கெசாப், உதவித் தூதுவர் றொபேர்ட் ஹில்டன் மற்றும் தூதரக அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், இலங்கையின் அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையிலான நல்லிணக்கம் மற்றும் அமைதி தொடர்பானதனது பார்வையை, இரா.சம்பந்தன் பகிர்ந்து கொண்டார் என்று அமெரிககத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார்.

இலங்கையில் நல்லிணக்க மற்றும் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான செயற்பாடுகள் முடக்க நிலையை நோக்கி நகரத் தொடங்கியுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றுளளது.

சில நாட்களுக்கு முன்னர் இலங்கையின் அமைச்சர் மனோ கணேசனையும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் சந்தித்து நல்லிணக்க முயற்சிகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இன்று ஒரு தகவல்

### முக்கோண நட்பு

என்னுடைய ஒரு நண்பர்கள் தன் நண்பர் ஒருவர் தன்னை மிகவும் அவமானப்படுத்தி விட்டதாகவும் எனவே அவரோடு இனிப் பேச்சுவார்த்தை வேண்டாம் என்று சொன்னார்.

நான் எப்போதும் போல் அவர் மூலம் அறிமுகமான அந்த நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன்.ஒருமுறை இதை என் நண்பர் பார்த்துவிட்டார்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் நண்பர் இதைப் பற்றி பேச்சு எடுத்தார். நான் அவ்வளவு தூரம் சொல்லியும் நீங்கள் அவருடன் பேசுவது சரியல்ல. என்னை அவமதித்தவனை நீங்கள் மதித்துப் பழகுகிறீர்கள் என்றால் அவன் செய்தது சரிதான் என்று நீங்களும் அங்கீகரிப்பதாகத் தானே அர்த்தம்? என்று குதித்தார்.

தவறு செய்கிறீர்கள் என்றேன்.

நண்பர் வியப்போடு பார்த்தார். நான் தொடர்ந்தேன். மறுக்கவில்லை. உங்களை அவமதித்தால் அது என்னையும் அவமதித்தது போலத்தான் ஆகும். ஆனால் நீங்கள் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரை அவர் சரிவர நடந்து கொள்கிறார். எனவே அவருடைய நட்பை நான் புறக்கணிப்பதில் எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.அதுமட்டுமல்ல. இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் ஒரு நாள் ஏன் அப்படித் தரக் குறைவாகப் பேசினார் என்பதற்கு விளக்கம் பெறாமல் நான் விடமாட்டேன்.அதுமட்டுமல்ல தவறு யார் பக்கம் என்பதை நான் புரிந்து கொண்டு அது உணர வைத்து, உங்கள் இருவரது கோபத்தைத் தணித்து உங்கள் நட்பைப் புதுப்பிக்கவும் நானே காரணமாக இருப்பேன் என்றேன். நண்பர் வாயில் பிளாஸ்டர்.

என் உறவினருக்கும் அவர் குடித்தனம் இருந்த வீட்டுச் சொந்தக்காரருக்கும் ஏதோ தண்ணீர்த் தகராறு (சாதாரண தண்ணீர் தான்) வீட்டைக் காலி செய் என்று நோட்டீஸ் கொடுத்தாகிவிட்டது. இது எனக்குத் தெரியும் , ஆனாலும் நான் எப்போதும் போல் வீட்டுக் காரரிடம் பேசிக் கொண்டேன். என் உறவினருக்கோ என்மீது அடங்காத வருத்தம். ஆனால் வீட்டு டெப்போஸிட் பிரச்சினையில் நான் தான் தலையிட்டுச் சுமூகமாகப் பிரச்சினையை முடிக்க முடிந்தது. நானும் இவர் வழியே போயிருந்தால்? அல்லது சிந்தித்திருந்தால்?

ஒரு மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் பயங்கர கருத்து வேறுபாடு . நான் அந்த மாமனாரோடு எப்போதும் போல் பழகியதில் இந்த மாப்பிள்ளைக்கு ஒரே எரிச்சல். என்னைத் திட்டித் தீர்த்தார். இன்றோ தணிந்து வந்து ,தூது போகச் சொல்கிறார் மாப்பிள்ளை. நானும் இவரோடு சேர்ந்து கொண்டிருந்தால் இன்று எந்த முகத்தோடு அந்த மாமனாரிடம் தூது போவதாம்?

யார் மூலமாக நட்பு உறவு ஏற்பட்டதோ அவர்களுக்குள் ஒரு கருத்து வேறுபாடு என்றால் நாமும் இந்த இரு கட்சிகளுள் ஒன்றில் சேர்ந்து விட வேண்டும் என்பதில்லை அல்லது ஒரு படி மேலே போய் நட்பை, உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை. •

மாறாக,

நாம் யார் பக்கம் என்பதைக் காண்பித்துக் கொள்ளாமல் அந்த இருவரையும் இணைத்து வைப்பதற்கான சந்தர்ப்பத்திற்காகத் தணியாத தாகத்துடன் காத்திருக்க வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் ‘81 போயஸ் கார்டன்’ வரை...

## ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






ஜெயலலிதா அப்பலோவில் அனுமதிக்கப்பட்டதும், ஒரு கோஷம் கேட்டதுதானே... "முதல்வர் பூரண நலம் பெற்றுத் திரும்பும்வரை இடைக்கால முதல்வரையோ அல்லது துணை முதல்வரையோ நியமியுங்கள்" என்று. இந்தக் கோஷத்துக்காக நாஞ்சில் சம்பத் முதல் பொன்னையன் வரை கோபப்பட்டார்கள். பொன்னையன் ஒரு தொலைக்காட்சி விவாதத்தில், "எல்லா முடிவுகளும் ஜெயலலிதாவிடம் விவாதித்தே எடுக்கப்படுகின்றன. துணை முதல்வர் எதுவும் தேவையில்லை" என்றார். ஜெயலலிதா விவாதிக்கும் நிலையில் இருப்பது லண்டன் வைத்தியர் ரிச்சர்ட் பியெலுக்கே தெரியாத இரகசியம். சரி... விடயத்துக்கு வருவோம். இந்தத் துணை முதல்வர் கோரிக்கை எதுவும் அ.தி.மு.கவுக்குப் புதிதல்ல... எம்.ஜி. ஆர். உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கும் ராமாபுரம் தோட்டத்துக்குமாக அலைந்து கொண்டிருந்த போது, இதே கோரிக்கையை ஜெயலலிதாவும் வைத்திருக்கிறார்.

**'துணை முதல்வரை நியமியுங்கள்!'**

ஆம். அது 1986ஆம் ஆண்டு. எம்.ஜி.ஆர். உடல் நலம் சரியில்லாமல் அப்பலோ, அமெரிக்கா என்று அலைந்து கொண்டிருந்தார். அரசியல் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், அந்தச் சமயத்தில்தான் அ.தி.மு.கவில் ஜெயலலிதா கட்டம்கட்டி வைக்கப்பட்டிருந்தார். எம்.ஜி. ஆரும், ஜெயலலிதாவை சந்திப்பதைத் தவிர்த்து வந்த காலம் அது. இது போன்ற சூழலில், ஜெயலலிதா அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதுகிறார். அதில், "எம்.ஜி.ஆர். உடல் நலமில்லாமல் இருக்கிறார். எனக்கு 42 எம்.எல். ஏக்கள் ஆதரவு இருக்கிறது. தமிழகத்தின் நலன் கருதி என்னைத் துணை முதல்வராக நியமிக்க அழுத்தம் தாருங்கள்..." என்ற பொருளில் அந்தக் கடிதம் இருந்திருக்கிறது.

ராஜீவ் காந்தியோ, அதை தன் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கொடுத்து... எம்.ஜி.ஆரிடமே ஒப் படைத்துவிடும்படி சொல்லிவிடுகிறார். அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் எம்.ஜி.ஆர். அதிர்ந்தே போய்விட்டார். தன் ஆட்சிக்கும், தனக்கும் எதிராகச் செயற்பட ஜெயலலிதாவுக்கு இந்த அளவுக்குத் துணிவு வந்துவிட்டதா என்று நினைத்த அவர்... சில தினங்களில், அ.தி.மு.கவின் அதிகார பூர்வ நாளிதழான 'அண்ணா'வில், "ஜெயலலிதாவுக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இனி அவருடன் கட்சிக்காரர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது" என்ற செய்தியை வெளியிடுகிறார்.

நாளிதழைப் பார்த்த ஜெயலலிதா, தான் அனுப்பிய பூமராங் தன்னையே மோசமாகத் தாக்கி விட்டதை உணர்கிறார். அடுத்து என்ன செய்யலாம்...? எம்.ஜி. ஆரை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது... ராமாவர தோட்டத்து வீட்டுச்சுவரில் ஆணி அடிக்கப்படுகிறது. ஆம், இந்தத் துரோகச்செயல் நினைவிலேயே இருக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கடிதத்தை ஃப்ரேம் செய்து தன் வீட்டில் மாட்டுகிறார் எம்.ஜி.ஆர்.

இந்தச் சம்பவம் குறித்து இன்னொரு விதமாகவும் சொல்கிறார்கள், "அந்தக் கடிதத்தையே அவர் காங்கிரஸ் தூண்டுதலின் பேரில் தான் எழுதினார்" என்று. அதாவது, "ஜெயலலிதா மருத்துவமனையில் இருக்கும் போது கொல்லைப்புறம் வழியாக, தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கிறது" என்கிறார் அல்லவா ஸ்டாலின். அது போல அப்போது காங்கிரஸ், எம்.ஜி.ஆரின் உடல் நலக் கோளாறைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பியது என்கிறார்கள். அதாவது, ஜெயலலிதாவைத் தூண்டி விட்டு, அவரை துணை முதல்வராக்கி, பின் கூட்டணி ஆட்சியைக் கொண்டு வரவிரும்பியது. ராஜீவ் காந்தியும் இதற்காக அழுத்தம் தந்தார் என்கிறார்கள். இதுகுறித்து 1988 ஆம் ஆண்டு அட்டர் சந்த் எழுதி வெளிவந்த, ‘M.G.Ramachandran : My Blood Brother’ என்ற புத்தகமும் விரிவாகப் பேசுகிறது.



ஜெயலலிதா அந்தக் கடிதத்தை, காங்கிரஸ் அழுத்தம் தந்து எழுதினாரா... இல்லை, சுயமாகவே எழுதினாரா என்று தெரியவில்லை. எது எப்படியோ..? 'துணை முதல்வரை நியமியுங்கள்' என்ற கோஷம் தமிழக அரசியலுக்கு புதிதல்ல... அதுவும் குறிப்பாக அ.தி.மு.கவுக்கு!

**'களேபரமான சட்டமன்றம்!'**

ஜெயலலிதா இராஜினாமா கடிதம் தொடர்பாக, ஜெவுக்கும், தி.மு.கவுக்கும் ஏற்பட்ட உரசல்களைப் பார்த்தோம் தானே... அது, அடுத்தகட்டத்தை எட்டியது. 1989ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி, நிதித் துறையைத் தன்னிடம் வைத்திருந்த முதல்வர் கருணாநிதி பட்ஜெட் உரையைப் படிப்பதற்காக எழுந்தார். அவர் பேசத் தொடங்குவதற்கு முன்பே... ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து, "ஜெயலலிதா விடயத்தில், தமிழக பொலிஸ் துறை ஜனநாயகமற்ற முறையில் செயற்படுகிறது. இது, சட்டமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறுவதாகும். உள்துறையைக் கையில் வைத்திருக்கும் கருணாநிதி தான் இதற்குக் காரணம். இது குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும்" என்கிறார். ஜெயலலிதாவும் உடனே எழுந்து, ''என் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. முதல்வர் தன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறார். அரசு, தனி மனித சுதந்திரத்தில் தலையிடுகிறது. இது குறித்து விவாதிக்க வேண்டும்'' என்று சட்டமன்றத்தில் கோஷமிடத் தொடங்கினார்.

சபாநாயகர், "இன்று பட்ஜெட் விவாதம் இருக்கிறது. இதுகுறித்து இன்று விவாதிக்க வேண்டிய தேவையில்லை" என்கிறார். சட்டமன்றத்தில் உஷ்ணம் பாய்கிறது. அ.தி.மு.க. உறுப்பினர்கள், சட்டமன்றத்தின் மையத்துக்கு வந்து கோஷம் போடத் தொடங்குகிறார்கள். ஜெயலலிதா, "கிரிமினல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஒருவர், பட்ஜெட் உரையைத் தாக்கல் செய்யக்கூடாது" என்கிறார். தி.மு.க. உறுப்பினர்கள் ஜெயலலிதாவின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து மோசமாககத்தத் தொடங்குகிறார்கள். ஓர் அ.தி.மு.க. உறுப்பினர் கருணாநிதி மீது மோத, அவரின் மூக்குக் கண்ணாடி கீழே விழுகிறது. உடனடியாக தி.மு.க. உறுப்பினர்கள் கருணாநிதியைச்சூழ்ந்து காக்கிறார்கள். இருபக்கமிருந்தும் மைக்குகளை, சேர்களைத் தூக்கி எறிவது என சண்டை தொடங்குகிறது. ஓர் அ.தி.மு.க. உறுப்பினர் கருணாநிதி கையில் வைத்திருந்த பட்ஜெட் உரையைக் கைப்பற்றிக் கிழிக்கிறார். தி.மு.க. உறுப்பினர் புத்தகங்களை ஜெயலலிதா மீது எறிகிறார். சட்டமன்றம், 'சண்டை'மன்றம ஆனது. சபாநாயகர் அவையைத் தள்ளிவைக்கிறார்.





சட்டமன்றத்துக்கு வெளியே ஜெயலலிதா கண்ணீரும் கம்பலையுமாக வெளியே வருகிறார். "தி.மு.க. உறுப்பினர்கள் என் புடவையை இழுத்தார்கள். இந்தச் சட்டமன்றத்தில் பெண்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. சட்டமன்றம் எப்போது பெண்களுக்குப் பாதுகாப்பானதாக மாறுகிறதோ... அப்போதுதான் சட்டமன்றத்துக்குள் வருவேன்" என்கிறார் கண்ணீருடன்.

அடுத்தநாள் எல்லா நாளிதழ்களிலும், இது தான் தலைப்புச் செய்தியாகிறது. ஜெயலிதாவை தன் அண்ணியாகப் பார்த்த எம்.ஜி.ஆர். ரசிகன், வெகுண்டெழுகிறான். பெண்கள், இதை தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகப் பார்க்கிறார்கள். தமிழகமெங்கும் ஜெயலலிதாவுக்கு ஆதரவு பெருகத் தொடங்குகிறது.

முதலில் கட்சியைக் கைப்பற்றிய ஜெயலலிதா, அடுத்து ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கான காய்களை நகர்த்தத் தொடங்குகிறார். முன்பே கருணாநிதி, 'ஜெயலலிதாவை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது' என்று கணித்திருந்தார். இப்போது அவருக்கு தன் கணிப்பு எவ்வளவு சரி என்று புரியத் தொடங்குகிறது.

(தொடரும்)





திருவெம்பாவையினை முன்னிட்டு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் பஜனை குழு நேற்று ஈழத்துச் சிதம்பரத்திற்கு சென்று பஜனையில் ஈடுபட்டனர். இப் பஜனை குழுவில் நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# 'மகிழ்ச்சியான ஆரம்பம்' நிகழ்வு

பருத்தித்துறை கோட்ட மட்ட பாடசாலைக் கல்விக்கு 'மகிழ்ச்சியான ஆரம்பம்' நிகழ்வு யா/ புற்றளை ம.வி.பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சு உதவிச் செயலாளர் அபிராமி பாலமுரளி கலந்து கொள்வார். (இ-7)


# அந்தியேட்டி சபீண்டீகரண அழைப்பு

கடந்த 12.12.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

**திருமதி. நேசரெத்தினம் கனகரெத்தினம்**

(பிள்ளை ரீச்சர்)



அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று 11.01.2017 புதன்கிழமை காலை 8 மணிக்கு மண்டைதீவு தெற்கு தலைக்கீரி தீர்த்தக்கரையிலும் சபீண் டீகரணக் கிரியைகள் நாளை 12.07. 2017 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்டைதீவு- 8 (இ)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 954

அபி




ராகு ராகு




நாதன்






சங்கவி





ரதி ரதிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி

07



## வடக்கின் நிர்வாக நீதிக்காக போராடுவதென சபதம் செய்கிறோம்

தென்பகுதியில் உள்ள கடமை நிறைவேற்று அதிபர்களின் சேவை மூப்புக்கு கொடுக்கப்பட்ட மதிப்பையும் கௌரவத்தையும் நேற்றைய சத்தியக் கடதாசியில் கண்டு கொண்டோம்.

இவை ஒரு புறம் இருக்க இப்போது வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் கல்வியமைச்சர் ஆகியோர் வெளிநாடு சென்றிருக்கின்ற வேளையில் முக்கியமான விடயங்களை சத்தியக்கடதாசி முடிக்கும் அதன் பயன் குறைவாகவே இருக்கும் என்பதையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் கடமை நிறைவேற்று அதிபர்களைப், பணி நீக்கம் செய்தல் என்ற முடிவுகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதேயன்றி, ஆர்ப்பாட்டங்களோ குழப்பங்களோ செய்வதில்லை என்பதில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கம் முடிவு செய்திருந்தது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட சகலரையும் கடமை நிறைவேற்று அதிபர்கள் சந்தித்தனர். ஆனால் ஆர்ப்பாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் பயந்து பணி செய்த எங்கள் அதிகாரிகளுக்கு அடக்கமும் பணிவும் பெறுமதியாகத் தெரியாமல் போயிற்று.

இதன் விளைவாக அவர்கள் கடமை நிறை வேற்று அதிபர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்தனர்.

அதேநேரம் அதிபர் தரம் III ஐ பெற்றிருந்த அதிபர்களை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வழிப்படுத்த அவர்கள் நீதிக்கும் மனச்சாட்சிக்கும் முரணாக செயற்பட்டனர். இதில் பலர் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு எத்தீங்கும் செய்யவில்லை என்பதும் சிலரே பேரினவாதத்தின் கூலியுடன் இணைந்து இலக்கையடைய உதவி செய்தனர் என்பதும் உண்மை.

பரவாயில்லை, புதிய அதிபர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில் அவர்களிடம் சகல பொறுப்புக்களையும் ஒப்படைப்பது என்பதில் கடமை நிறைவேற்று அதிபர்கள் மிகவும் உறுதியாக இருந்தனர். கடமைக்குப் புதிதாக வருகின்றவரை நாம் வரவேற்க வேண்டும். அவரை அதிகாரிகள் நியமிக்கின்றனர்.

எனவே அவருடன் முரண்படுவதென்பது அடிப்படையில் நியாயமற்றது.

ஆகையால் புதிய அதிபர்களிடம் கடமையை ஒப்படைத்து தேவைப்படின் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதென்றும் கடமை நிறைவேற்று அதிபர்கள் முடிவு செய்தனர்.

எனினும் இத்தகைய மாற்றங்கள் இடம் பெறுவதற்கு முன்னதாக கடமை நிறைவேற்று அதிபர்கள் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரனுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்காக அவரின் அலுவலகத்துக்குச் சென்றனர்.

அன்றைய தினம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. காலை 9 மணிக்குச் சென்ற கடமை நிறைவேற்று அதிபர்கள் பிற்பகல் ஒரு மணிவரை காத்திருந்தனர். பிற்பகல் ஒரு மணியளவில் அமைச்சின் செயலாளர் எங்களில் நான்கு பேரைச் சந்திப்பதற்கு வருமாறு அழைத்தார்.

அனைவரும் உங்களைச் சந்திக்கவே வந்துள்ளோம் என்று கூறினோம்.

அதற்கு இசைந்தாற்போல் செயலாளரும் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வெளியில் வந்தனர்.

கடமை நிறைவேற்று அதிபர்களை தனது கலந்துரையாடல் மேசைக்கு அழைத்து இருத்திக் கதைப்பார் என்று எதிர்பார்த்த கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அதில் ஏமாற்றமே கிடைத்தது.

பரவாயில்லை, பதவியே பறிபோகிறதாம். இருத்திக் கதைத்தால் என்ன? நிறுத்திக் கதைத்தால் என்ன? என்ற மனநிலையில் இருந்த கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை என்று என்று கூறிக்கொள்ளலாம்.

இருந்தும் ஒன்பது வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றி அந்தப் பணியில் இருந்து விலக்குப் பெறும் ஒரு அதிபரை இருத்திக் கதைப்பதற்குக் கூட நம் மண்ணில் முடியவில்லை என்றபோது இது நமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் இதே கதிதான் நடக்கும் என்பதை எங்களால் அனுமானிக்க முடிந்தது.

***இருட்டினில் வாழும் உயிர்களுக்கு அந்த இறைவன் தானே கைவிளக்கு விடிந்த பின்னால் அந்த விளக்கு எதற்கு எல்லாம் முடிந்த பின்னால் அவன் அருள் எதற்கு*** என்பது ஒரு சினிமாப் பாடலின் வரிகள்.

இருட்டில் தேவைப்படும் கைவிளக்கை விடிந்த பின்னர் யாரும் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. இதுவே உலக நியதி.

மகாத்மாகாந்தி பாரத தேசத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுத்தாராயினும் கோட்சே என்பவன் தன் துப்பாக்கியால் காந்தியைச் சுட்டான்.

என்ன செய்வது எல்லோரும் புனிதர்களாக, நல்வர்களாக, பண்புடையவர்களாக, நேர்மையுடையவர்களாக, கடவுளுக்குக் கணக்குக் காட்டக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று நினைத்தால் நினைத்தவரின் தவறேயன்றி வேறில்லை.

எதுவாயினும் நாம் இங்கு முன்வைத்த சத்தியக் கடதாசி எம் தொடர்பில் நீங்கள் கழிவிரக்கம் கொள்ளுமாறு அல்ல, மாறாக எங்கள் வடக்கு மாகாணத்தில் நீதி நிலை நாட்டப்படவேண்டும்.

நிர்வாக அதிகாரிகள் நேர்மைத் திறத்துடன் செயற்பட வேண்டும். செல்வாக்குடையவர்கள் மணலிலும் பம்பரத்தை சுற்றச் செய்வார்கள் என்ற நிலைமையில் இருந்து எங்கள் தாயகத்தைக் காப்பாற்ற வேண்டும். இதற்காக நாம் போராடுவது என்று தீர்மானித்து விட்டோம்.

சோல்பரிக் பிரபுவின் மகனின் முதுகில் தவத்திரு யோகர் சுவாமிகள் ஓங்கி ஒரு குத்துப் போடாதிருந்தால்; மட்டக்களப்பு செங்கலடியில், அமெரிக்காவின் ஹாவாயில் ஆச்சிரமங்கள் தோன்றியிருக்காது.

எனவே கடமை நிறைவேற்று அதிபர்களாகிய நாம் எமக்கு இழைக்கப்பட்ட அநீதியில் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவம் நீதிக்காக போராட வேண்டும் என்பதுதான்.

அதை நிச்சயம் செய்வோம். அதேநேரம் வடக்கு மாகாண அரசு எங்கள் விடயத்தில் சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்த முடியுமென அறிவித்துள்ளது. அதற்கான சந்தர்ப்பங்கள் நிச்சயம் வழங்கப்படும்.

அதேநேரம் அன்புக்குரிய தமிழ்மக்களே!


வேறு எந்த மாகாணத்திலும் நடக்காத- இலங்கையின் வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத ஒரு வஞ்சகத் தனத்தை வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகம் செய்து விட்டது.

பாடசாலைக்குப் பாடசாலை வேறுபாடு என்ற அடிப்படையில் நிர்வாக சமத்துவமின்மையும் தாராளமாக இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் நீதிக்காகப் போராடுவோம் என்ற எங்கள் உறுதிமொழியை நிறைவேற்ற உங்களிடம் வருவோம்.

மேலும் வடக்கின் முதலமைச்சர் மற்றும் கல்வியமைச்சர் ஆகியோர் தாயகம் திரும்பியதும் தேவையேற்படும் பட்சத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக் கடதாசி இவ்விடத்தில் தொடரும்.

புரந்தரன்



வேலணை, சரவணை ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபனக் கும்பாபிஷேகப் பெருவிழா ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் மத்தியில் அண்மையில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து கோயில் புனரமைப்புக்கான திருப்பணி வேலைகள் தலைவர் ஐ.கோ.சந்திரசேகரன் தலைமையிலும் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ சி.நந்தகுமார் வழிகாட்டுதலிலும் நடைபெற்று வருவதைப் படங்களில் காணலாம்.

## இலங்கையில்

# பிரமாண்ட வசதிகளுடன் இரட்டைக் கோபுரம்

இலங்கையில் World Export Centre என்ற பாரிய இரட்டைக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பெரும்பாலான பல்வகைப்படுத்தப்பட்ட மற்றும் ஏற்றுமதியில் கூடுதல் வணிக மதிப்புக் கொண்ட முன்னோடி வணிக கூட்டு நிறுவனமான ஹேலிஸின் புதிய திட்டமாக இந்த "World Export Centre" இரட்டைக்கட்டட நடவடிக்கை. ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலகளாவிய ரீதியில் பிரபலமான கட்டடக்கலையினை இலங்கையினுள் பிரபலப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படும் இந்த இரட்டைக் கட்டடம் தலா 55 மாடிகளைக் கொண்டுள்ளது.

இந்த கட்டடத்தில் 20,000 ஊழியர்களுக்கு சேவை வசதி வழங்கப்படவுள்ளது.

2000 மோட்டார் வாகனங்கள் நிறுத்தக்கூடிய வகையில் வாகன நிறுத்துமிடம் மற்றும் பிற வசதிகளுக்காக 3 மாடிகளும் உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# பொறுப்புக்களை நிறைவேற்ற விரைவாக ஒன்றுபடவேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒரு தேசியக் கொள்கை துரிதமாக வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பசுமைக் கட்டட வழிகாட்டி சஞ்சிகை மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

எமது நாடு ஒரு சிறிய தீவு என்றபோதும் துரிதமாக அதிகரித்து வரும் சனத்தொகை வளர்ச்சியுடன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் வீடமைப்புக்காக ஒரு தேசியக் கொள்கை இல்லாத காரணத்தினால் பல்வேறு சவால்கள் உருவாகியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்தவகையில் இன்னும் 25-30 வருடங்களாகும் போது விவசாயத்திற்கான நிலங்களின் அளவு மட்டுப்படுத்தப்பட்டு விவசாயத்துறையில் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களினதும் இயற்கையினதும் இருப்புக்காக எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற நாம் விரைவாக ஒன்றுபடவேண்டும்.

2017 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நிர்மாணத் துறையை பசுமையாக்குவதற்கான முதற்கட்டமாக அரசாங்கத்துறையில் உள்ள நிறுவனங்களின் கட்டடங்கள் சூழல் நட்புடைய பசுமைக் கட்டடங்களாக அமைப்பதற்கு ஜனாதிபதி அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் மகாவலி அபிவிருத்தி. சுற்றாடல் துறை அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை இணைந்து பசுமை கட்டட வழிகாட்டி சஞ்சிகை மற்றும் பசுமை மதிப்பீட்டு முறைமையை தொகுத்துள்ளன.

இவ்வெளியீடு மகாவலி அபிவிருத்தி. சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன. பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க ஆகியோரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கான உத்தியோகபூர்வ இணையத்தளமும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்களுக்கு உரிய தெளிவினை வழங்கி இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது பொறியியலாளர்கள் மற்றும் நிர்மாணத்துறையிலுள்ள நிபுணர்கள் உள்ளிட்ட அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் உட்பட நிர்மாணத் துறை நிபுணர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)



உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள நினைவுத் தூபிக்கு அருகில் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்றது. வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோருடைய ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பதில் முதலமைச்சரும் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்களான கே.விந்தன், து.ரவிகரன், எஸ்.சிவநேசன், இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் எஸ்.குலநாயகம், பொருளாளர் கனகசபாபதி, மறவன்புலவு சச்சிதானந்தம், சிரேஷ்ட சட்டத்தரணி கரிகாலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறில், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் எஸ்.சுகிர்தன், முன்னாள் உப தலைவர் எஸ்.சஜீவன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தத்தால் எழுதப்பட்ட தமிழாராய்ச்சி படுகொலைகள் எனும் நூலை சிவாஜிலிங்கம் வெளியிட்டு வைக்க பதில் முதலமைச்சர் ஐங்கரநேசன் பெற்றுக்கொண்டார். கடந்த 1974 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 11 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் :- உ.சாளின்)

# ஆளும் கட்சியினரின் முரண்பாடான கருத்துக்களே அம்பாந்தோட்டையில் பிரச்சினைக்கு காரணம்- டலஸ் எம்.பி.

(கொழும்பு)

ஆளும் கட்சியின் முரண்பாடான கருத்துக்களினாலேயே அம்பாந்தோட்டையில் பிரச்சினைகள் ஏற்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ஒரு நிலைப்பாட்டையும் அமைச்சர்கள் மற்றுமொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

அம்பாந்தோட்டையில் காணிகள் பெற்றுக்கொள்வது தொடர்பில் பிழையான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே 5,000 ஏக்கர் காணி கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் 15,000 ஏக்கர் காணி வழங்கப்பட முயற்சிக்கப்படுகின்றது.

அரச தலைவர்களுக்கு அனர்த்தம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டதாக அமைச்சர் சாகல ரட்நாயக்க சுமத்திய குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாநாயக்க தேரரான ஓமல்பே காசியப்ப தேரரும் இருந்தார்.

பொலிஸ்மா அதிபர் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காவிஉடைகளைகளைந்து இவர்களைத் தாக்க வேண்டுமென பொலிஸ்மா அதிபர் கூறுகின்றார்.

ஆறு பௌத்த பிக்குகள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது ஓர் மோசமான தாக்குதலாகும் எனக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின்உரிமையை வைத்துக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது என டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)




# ராஜாவின் மனக்கவலை

ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு ராஜா.

அந்த ராஜாவுக்கு ஒரு மனக்கவலை. அதை யாரிடமும் சொல்ல முடியாமல் குழப்பத்தோடு உட்கார்ந்திருந்தான்.

அரசனின் முகத்தைக் கவனித்த மந்திரிக்கு ஏதோ பிரச்னை என்று புரிந்து விட்டது. ஆனால் வற்புறுத்திக் கேட்டால் அவர் தவறாக நினைத்துக்கொள்வாரோ என்று அச்சம்.

ஆகவே மந்திரி ஒரு தந்திரம் செய்தார். 'அரசே, நீங்கள வேட்டைக்குப் போய் ரொம்ப நாளாகிவிட்டதல்லவா?'

'ஆமாம்' என்றான் அரசன். 'ஆனால் இப்போது நான் வேட்டையாடும் மனநிலையில் இல்லை!'

'மனம் சரியில்லாத போது தான் இதுமாதிரி உற்சாக விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும் அரசே' என்றார் மந்திரி. 'புறப்படுங்கள். போகிற வழியில்தானே உங்களுடைய குருநாதரின் ஆசிரமம்? அவரையும் தரிசித்து விட்டுச் செல்லாம்!'



'குரு' என்றவுடன் அரசன் முகத்தில் புதிய நம்பிக்கை. மகிழ்ச்சி. வேட்டைக்காக இல்லாவிட்டாலும் அவரைச் சநதித்தால் தன்னுடைய குழப்பத்துக்கு ஒரு தெளிவு பிறக்கும் என்று நினைத்தான் அவன்.

அரசனின் குருநாதர் ஒரு ஜென் துறவி. ஊருக்கு வெளியே ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். அவரும் அவருடைய சீடர்களும் அரசனை அன்போடு வரவேற்று உபசரித்தார்கள்.

இந்தக் களேபரமெல்லாம் முடிந்தபிறகு அரசன் தன் குருநாதரைத் தனியே சந்தித்தான். தனது குழப்பங்களை விவரித்தான். அவற்றைச் சரி செய்வது எப்படி என்று தான் யோசித்துவைத்திருந்த தீர்வுகளையும் சொன்னான். குருநாதர் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

கடைசியாக அரசன் கேட்டான். 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் குருவே?'

அவர் எதுவும் பதில் பேசவில்லை. சில நிமிடங்களுக்குப்பிறகு 'நீ புறப்படலாம்' என்றார்.

அரசன் முகத்தில் கோபமோ, ஏமாற்றமோ இல்லை. உற்சாகமாகக் கிளம்பிச் சென்று தன் குதிரையில் ஏறிக்கொண்டான். நாலு கால் பாய்ச்சலில் காட்டை நோக்கிப் பயணமானான்.

இதைப் பார்த்த மந்திரி குருநாதரிடம் ஓடினார். 'அரசருடைய பிரச்னையை எப்படித் தீர்த்துவைத்தீர்கள் குருவே?' என்று ஆர்வத்தோ்டு கேட்டார்.

'உன் அரசன் ரொம்பப் புத்திசாலி. அவனே தன் பிரச்னையைத் தீர்த்துக் கொண்டான்' என்றார் ஜென் குரு. 'நான் செய்ததெல்லாம், அவன் தன்னுடைய குழப்பங்களைச் சொல்லச் சொல்லப் பொறுமையாகக் காது கொடுத்துக் கேட்டேன். சாய்ந்து அழத் தோள் கொடுத்தேன். அவ்வளவுதான்!'

## 01.2017 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1055 - தியோடோரா பைசண்டைன் பேரரசியாக முடி சூடினாள்.
- 1569 - முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.
- 1693 - சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.
- 1779 - மணிப்பூரின் மன்னராக சிங்-தாங் கோம்பா முடிசூடினார்.
- 1782 - பிரித்தானியர் சேர் எட்வேர்ட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்ரோ தலைமையில் திருகோணமலையைக் கைப்பற்றினர்.
- 1787 - யுரேனஸ் கோளின் இரண்டு துணைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1805 - மிச்சிகன் பிரதேசம் அமைக்கப்பட்டது.
- 1851 - சீனாவில் குயிங் அரசிற்கெதிராக ஹொங்க்சியூகான் என்பவர் தலைமையில் தாய்பிங் என்ற இராணுவக் குழு ஆரம்பிக்கப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.
- 1879 - ஆங்கிலோ-சூளு போர் ஆரம்பமானது.
- 1878 - பால் முதற்தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1911 - காம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மவுலானா முகம்மது அலி கல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.
- 1922 - நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.
- 1943 - ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.
- 1946 - என்வர் ஹோக்ஸா அல்பேனியாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்து அதனைக் குடியரசாக்கினார்.
- 1957 - ஆபிரிக்க உடன்பாடு' டக்கார் நகரில் எட்டப்பட்டது.
- 1962 - பெருவில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 4,000 பேருக்கு மேல் இறந்தனர்.
- 1972 - கிழக்கு பாகிஸ்தான் வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1998 - அல்ஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 2007 - செயற்கைக் கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

### பிறப்புகள்

- 1755 ஸ்ரீ அலெக்சாண்டர் ஆமில்டன், அமெரிக்க மெய்யியலாளர் . (இ. 1804)
- 1786 - ஜோசப் ஜாக்சன் லிஸ்டர், ஆங்கிலேய இயற்பியலாளர் . (இ. 1869)
- 1859 - கர்சன் பிரபு, ஆங்கிலேய அரசியல்வாதி இந்தியத் தலைமை ஆளுநர் . (இ. 1925)
- 1906 - ஆல்பர்ட் ஹாப்மன், சுவீடிய வேதியியலாளர் . (இ. 2008)
- 1953 - ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே, இலங்கையை அரசியல்வாதி . (இ. 2008)
- 1973 - ராகுல் திராவிட், இந்தியத் துடுப்பாட்டக்காரர்
- 1982 - சன் யி-ஜின் (நடிகை), தென்கொரிய நடிகை.

### இறப்புகள்

- 314 - மில்த்தியாதேஸ் .(திருத்தந்தை)
- 1753 - ஹேன்ஸ்ஸ்லோன், ஐரிய மருத்துவர்.(பி.1660)
- 1902 - ஜானி பிரிக்ஸ், ஆங்கிலேயத் துடுப்பாளர். (பி. 1862)
- 1928 - தாமஸ் ஹார்டி, ஆங்கிலேய எழுத்தாளர். (பி. 1840)
- 1932 - திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி . (பி. 1904)
- 1966 - லால் பகதூர் சாஸ்திரி, 2வது இந்தியப் பிரதமர் . (பி. 1904)
- 1975 - நீலாவணன், ஈழத்துக் கவிஞர் .(பி. 1931)
- 1976 - ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்.
- 2000 - பெட்டி ஆர்க்டேல், ஆங்கிலேய-ஆத்திரேலியத் துடுப்பாளர் . (பி. 1907)
- 2007 - எருவில் மூர்த்தி, ஈழத்துக் கவிஞர்.
- 2008 - எட்மண்ட் இல்லரி, நியூசிலாந்து மலையேறுநர் . (பி. 1919)
- 2013 - ஏரன் சுவோற்சு, அமெரிக்கக் கணினியாளர் . (பி. 1986)
- 2014 - ஏரியல் சரோன், இசுரேலின் 11வது பிரதமர். (பி. 1928)

### சிறப்பு நாள்

- அல்பேனியா - குடியரசு நாள் . (1946)
- நேபாளம் - ஐக்கிய நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 40 | 40 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 110 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 180 | 150 | 200 | 200 |
| தக்காளி | 170 | 170 | 160 | 140 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 60 | 70 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 40 | 60-120 | 80 | 120 | 60 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 100 | 100 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 110 | 100 | 100 |
| பாகற்காய் | 240 | 400 | 260 | 240 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 60 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 180 | 170 | 160 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 160 | 60 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 100 | 80 | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 250 | 200 | 160 | 180 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 400 | — | — | 400 | 400 | — |
| போஞ்சி | 80 | 100 | 90 | 80 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 | — | 40 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 50 | 50 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 140 | 170 | 240 | 180 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 80 | 40 | 60 | 80 | 100 | 60 |

தான் எதற்குத் தகுதியானவன் என்று கண்டிப்பதும் அதனை செய்து காட்ட வாய்ப்பினைத் தேடி அடைவதும்தான் உண்மையான மகிழ்ச்சி.

– ஜோன் டூரி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலையில் பட்டம் பெறும் எமதருமை சகோதரர்களுக்கு...

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார் ஒளவையார். இது அன்று கூறியது. இதனை இன்று கூறுவதாயின் கற்றுக் கொண்டிருப்போருக்குச்சென்ற இடமெல்லாம்சிறப்புஎன்றே ஒளவையார் தன் பாட்டை அமைத்திருப்பார்.

எவனொருவன் கற்காமல் விடுகிறானோ அன்றே அவன் கற்பிக்கத் தகுதியற்றவன் என்று இந்திய தேசத்தின் குடியரசுத் தலைவராக இருந்த பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஆக, கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் என்பதே உண்மை. இன்றைய உலகில் மாறிவரும் விடயங்களை அன்றாடம் பதிவு செய்து கொள்வது கட்டாயமானதாகிவிட்டது.

உலகம் ஓடுகின்ற ஓட்டத்துக்கு ஏற்ப ஓடப்பழகி கொள்ள வேண்டும். இல்லையேல் வாழ்க்கையில் நாம் பிந்தி விடுவோம். இது ஒருபுறமிருக்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றும் இன்றும் பட்டம் பெறும் அன்புக்குரிய சகோதரர்களே! உங்கள் எதிர்காலம் சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்.

அதேநேரம் உங்களுடன் சில நிமிடங்கள் பேச விரும்புகின்றோம். பொதுவில் பட்டம் பெற்றவர்கள் அரச வேலைக்காகக் காத்திருத்தல் என்ற ஒரு வழமையில் ஊறிப் போயுள்ளனர்.

இதில் இருந்து நாம் விடுபட வேண்டும். பட்டதாரிகளாகிய நீங்கள் சுயதொழில் மற்றும் விவசாயம், கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட முன்வர வேண்டும். அப்போதுதான் எங்கள் நாட்டின் பொருளாதாரம் ஏற்றம் பெறும். படித்துப் பட்டம் பெற்றவர்கள் அனைவரும் கோவைகளுடன் இருந்துவிட்டால் எங்கள் நிலைமை என்னவாகும்.

பட்டம் பெற்றவர்களுக்கு அரச வேலை; ஏனையவர்களுக்கு வர்த்தகம் என்றிருந்தால் உழுதுண்டு வாழும் எங்கள் உன்னத வாழ்வு கேள்விக் குறியாகி விடும்.

ஆனால் நிலைமை, பட்டம் பெற்றவர்கள் அரச பணியையும் ஏனையவர்கள் வர்த்தகம் என்பதிலுமே நாட்டம் காட்டுகின்றனர்.

வர்த்தகம் என்பது நாமே உற்பத்தி செய்து விற்பதாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் இறக்குமதிப் பண்டங்களை விற்றுத் தீர்க்கும் விற்பனை முகவர் பணி மட்டுமே எங்களிடம் நடந்தாகிறது.

இத்தகைய போக்குகள் எங்களின் பொருளாதாரத்தை அதளபாதாளத்துக்குக் கொண்டு சென்று விடும்.எனவே பட்டம் பெற்றுள்ள நீங்கள் உங்கள் சொந்தக்காலில் நின்று தொழில் புரியத் தயாரா குங்கள்.

மூலதனம் போதாது என்றால் பல்கலைக்கழக நண்பர்களாகக் கூட்டுச்சேருங்கள். கம்பனியாக உங்கள் தொழில் முயற்சிகளை ஆரம்பியுங்கள்.

நீங்கள் படித்ததை – பெற்ற பட்டத்தை பிரயோகித்துப் பாருங்கள். வெற்றி நிச்சயமாகும்.

அரச பணியில் இருந்தால் மாதமாதம் சம்பளம் கிடைக்கும் ஓய்வுகாலத்தில் பென்சன் கிடைக்கும் என்ற எல்லைகளுக்குள் எங்கள் வாழ்வை மட்டுப்படுத்திக் கொள்ளும் மடமைத் தனத்தை வெட்டி வீழ்த்தி ஆபத்துக்கு முகம் கொடுத்து சொந்தமாகத் தொழில் ஆரம்பித்து சாதனை படைப்போம் என்று சபதம் எடுங்கள்.

எந்தப் பணியைச் செய்தாலும் அதில் நேர்மை, நீதி, தர்மம், உண்மை என்பவற்றைப் பேணுதல் என்று திடசங்கற்பம் கொள்ளுங்கள்.

பிறரை மதித்தல், அன்பான சொற்களைப் பயன்படுத்தல், கோபம் சினம் தவிர்த்தல், பிறருக்கு உதவுவது என்று நினைத்தல், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று பணி புரிதல் இதுவே எம் கொள்கை என்று நெஞ்சில் தட்டி கூறுரையுங்கள். நீங்களே எம் மண்ணின் நிர்வாகிகள், உற்பத்தியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள்.

ஆகையால் உங்களால் இந்த மண் பஞ்சம் போக்கும். புகழ் பெறும். இது நிச்சயம். கூடவே இன்னு மொன்று விவசாயத் துறையை வேண்டாம் என்று விரட்டி விடாதீர்கள். விவசாயத் துறைதான் எங்களை வாழவைப்பது.

ஆகையால் விவசாயத்திலும் உங்கள் முயற்சியாண்மை வெற்றி பெறட்டும். உங் களால் இந்த மண்ணும் மக்களும் உங்கள் உறவுகளும் வாழட்டும்.

## கண் பார்வையில் குறைபாடுள்ள மாணவி முதலிடம் வந்து சாதனை

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தர உயர தரப் பரீட்சையில், கண் பார்வையில் குறைபாடுள்ள மாணவி முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

காலிமாவட்டத்தில் கலைப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய தனுஷி மல்லிகாராச்சி என்ற மாணவி முதலாம் இடத்தை பிடித்துள்ளார்.

குறித்த மாணவி தெளிவான கண் பார்வையற்ற நிலைமையில் இந்த பெறுபேறுகளை பெற்றமையே விசேட அம்சமாகும்.

Braille system எனப்படும் பார்வையற்றவர்களுக்கான முறையை பயன்படுத்தியும் மாணவி பரீட்சை எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாணவர்களைப் போன்று சாதாரண முறையில் பரீட்சை எழுதிய தனுஷி, தனது கண்களுக்கு மிகவும் அருகில் புத்தகத்தை அல்லது பரீட்சை தாள்களை கொண்டு சென்றால் மாத்திரமே அவரால் பார்க்க முடியும்.

அவர் கற்கையின் போது புத்தகத்தை கண்ணுக்கு மிகவும் அருகில் கொண்டு சென்றே கற்றுள்ளார்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்றால் எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் அதனை தாண்டி வெற்றி பெற வேண்டும் என்பதற்கு தனுஷி ஒரு சிறந்த உதாரணமாகியுள்ளார். (இ-3)

## உள்ளூர் குடிநீர் விநியோகத்துக்கு அமெரிக்காவும் உதவி வழங்கும்

இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 150 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டிலான குடிநீர திட்டத்தில் அமெரிக்க அரசாங்கமும் இணைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல யு.எஸ்.எய்ட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குடிநீர் திட்டத்தின் விரிவாக்கமாகவே இந்த திட்டம் அமை வதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது

இந்தநிலையில் இலங்கையர்களின் குடும்பங்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வைக் காண அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அமெரிக்காவின் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் மழைநீரை தேக்கிவைக்கும் தாங்கிகள் அமைப்பு, குடிநீருக்கு குழாய் பொருத்தல், வெள்ளம் மற்றும் வெப்பமான காலநிலையின் போது பாதிப்புக்களை குறைப்பதற்காக அடித்தள வசதிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள் ளன.

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் திட்டத்துக்கும் உதவுவதே தமது நோக்கம் என்றும் கெசாப் தெரிவித்தார். (இ-3)

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் 23ஆம் திகதிக்குப் பின்னர் முடிவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலான இறுதி முடிவை ஜனவரி 23பம் திகதிக்கு பின்னர் எடுக்க, கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக, அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கொழும்பில் இடம்பெற்ற கொடுமை அநாதையான ஒருவயதுக் குழந்தை

### கணவன், மனைவி உயிரிழப்பு

(கொழும்பு)

தனது மனைவியை அடித்து இழுத்துவந்து, களனி கங்கைக்குள் தள்ளிவிட்ட கணவன் தானும் கங்கைக்குள் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மேலும், குறித்த இருவரினது ஒரு வயது மதிக்கத்தக்க குழந்தை ஒன்றும் அநாதரவாக்கப்பட்டுள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த இருவருக்கும் இடையிலான குடும்பப் பிரச்சினை காரணமாக இந்த தற்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

28 வயதான சுதந்தரலிங்கம் பாக்கியராஜா மற்றும் அவருடையமனைவியான 25 வயதான ராஜகோபால் பானுமதி ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த இருவருக்கும் இடையில், அடிக்கடி குடும்பத்தகராறு இடம்பெற்றமை தொடர்பில் பொலிஸ்நிலையத்தில்முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை யாழ்.பிரதேசத்தில் காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில ஒல்லிமோட்டை பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## ஹயஸ்-ஹன்டர் மோதி விபத்து

### மூவர் படுகாயம்

பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த வாகனம் வேகமாக பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட போது பிரதான வீதியால் வந்த ஹயஸ் வாகனத்தை பந்தாடியதில் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி அப்பகுதிக்கு பொலிஸார் சென்றபோது 3 வாகனங்கள் மணலுடன் தப்பியோடியுள்ளன.

துரத்திச் சென்ற பொலிஸார் வாகனத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் ஒரு ஹன்டர் வாகனத்தின் டயர் காற்றுப் போன நிலையில் மணலைப் பறித்துவிட்டு தப்பியோடியதாகவும் மற்றைய வாகனத்தில் ஒன்றைப்பொலிஸார் துரத்திச் சென்றபோது வதிரி வழியாக தப்பிச் சென்று பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதியைக்கடந்து கூவில் பகுதிக்குச் சென்று மீண்டும் சாரையடிப் பகுதியூடாக பருத்தித்துறை -யாழ்ப்பாண வீதியை வேகமாக கடக்க முற்பட்டபோது வீதியால் பயணித்த ஹயஸ் வாகனத்துடன் மோதி பின்னர் எதிர்ப் பகுதியில் நின்றிருந்தமின்கம்பத்துடன் மோதி நின்றது.

இதில் ஹயஸ் வாகனத்தின் முகப்புப் பகுதி சின்னாபின்னமாகியதுடன் ஹன்டர் வாகனத்தின் முன்பக்கம் பலத்த சேதமடைந்தது.

இதில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த வீ.எம்.றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த பிரேமரட்ன முகுந்தன் (வயது 30), புலோலி தெற்கைச் சேர்ந்த செல்லத்தம்பி சுதர்சன் (வயது 27) ஆகியோரும் ஹன்டர் வாகனத்தைச் செலுத்திவந்த துன்னாலை தெற்கைச் சேர்ந்த தங்கவேலு சதீஸ்குமார் (வயது 27) ஆகிய மூவரும் படுகாயங்களுக்குள்ளாகினர்.

அவசர அம்புலன்ஸ் மூலமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மூவரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த இருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றப்பட்டனர்.

பலத்த சேதமடைந்த வாகனங்கள் கனரக வாகனத்தின்உதவியுடன்பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-60)

## கால்கோள் விழாவும் சின்னம் சூட்டுதலும்

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் கால்கோள் விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு காரளசிங்கம் கட்டடத்தில் வி.கிஷானி தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் சங்க செயலாளர் க.கமலசேகரரும PC system உரிமையாளர் ப.கமலக்கண்ணனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

++++++++++++++

(கரணவாய்)

யாழ். கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழாவும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சின்னத்தம்பி மண்டபத்தில் பி. வக்சஜா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் ஓய்வுபெற்ற நில அளவையாளர் தாமோதரம்பிள்ளை சிறீஸ்காந்தசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர். (இ-60)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மனப்படகின் பாயை விரி



✦ பல ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப் பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டு தான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக்க டந் து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வது தான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டு விடுவதில்லை. கடைத் தேற்றும் வழிமுறைகளை அருள் செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப் பாதையில் கொண்டு சென்று விடும்.

# NORTHERN CHALLENGERS உதைபந்தாட்டம் ஐக்கியம், அன்ரனீஸ் சுப்பர் 8 தகுதி



சென் அன்ரனீஸ்.வி.கழகம்




விடத்தல் தீவு ஐக்கியம்.வி.க

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் NORTHERN CHALLENGERS - 2016 உதைபந்தாடட போட்டியில்,

08.01.2017 அன்று நடைபெற்ற போட்டியில் அடம்பன் ஐக்கியம் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கியம் அணி மோதியது.

போட்டியானது 0:0 என்ற கோல் கணக்கில் முடிவடைய சமநிலை தவிர்ப்பு மூலம் 4:3 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கியம் வெற்றி பெற்று சுப்பர் -8 சுற்றுக்கு தகுதி பெற்றது.

இரண்டாம் போட்டியில் நியூட்டன் அணியை எதிர்த்து விளையாடிய பாசையூர் சென்அன்ரனீஸ் அணி 4: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றது. (கு)

# மனோகரா சுப்பர்-8 சுற்றுக்கு தகுதி



மனோகரா.வி.கழகம்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் NORTHERN CHALLENGERS -2016 உதைபந்தாட்ட போட்டியில் 10.01.2017 அன்று நடைபெற்ற போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து மனோகரா அணி மோதியது. மிகவும் பரபரப்பான போட்டியில் மனோகரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெற்றது. (கு)

# வல்லரசன் உதைபந்து தொடர் பலாலி விண்மீன் வெற்றி





குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரின் (07.01.2017) ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் மோதியது.

ஆரம்பம் முதல் அபாரமாக ஆடிய இரு அணிகளும் கோல் பரபரப்பை ஆக்கிரமித்தன.16ஆவது நிமிடத்தில் மேரிஸ் வீரன் யூட் அபாரமாக ஒரு கோலினை பெற்றுக் கொர்டுக்க பதிலுக்கு 17ஆவது நிமிடத்திலேயே விண்மீன் வீரன் நிஷாந்தன் கோல் ஒன்றை போட சமநிலையுடன் ஆட்டம் மேலும் விறுவிறுப்பானது.

இரண்டாவது பாதியில்(38 ஆவது நிமிடம்) விண்மீன் வீரர் உதயதாஸ் கோல் ஒன்றை போட ஆட்ட நிறைவில் விண்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக இரண்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். (கு)

# தந்தை செல்வா விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி



இறுதிப் போட்டியில் கோல்ட்ஸ்ரார்

தந்தை செல்வா விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கோல்ட்ஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதல் போட்டியில் GPS விளையாட்டுக் கழகத்தை விதுசனின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அடுத்த சுற்றில் எல்லாளன் விளையாட்டுக் கழகத்தை பகீரதனின் துல்லியமான பந்து வீச்சும் மகியின் அட்டகாசமான துடுப்பாட்டத்தின் மூலம் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதி போட்டியில் தந்தை செல்வா விளையாட்டுக் கழகத்தை பகீரதன், கபில் ஆகியோரது சிறப்பான் துடுப்பாட்டம் மற்றும் கஜன், ஹரி, பகி, பிறேம் ஆகியோரது துல்லியமான பந்து வீச்சின் உதவியுடன் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

பொங்கல் தினத்தன்று இறுதிப் போட்டியில் செங்கொடி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொள்கிறது கோல்ட்ஸ்ரார் அணி. (கு)

# மைக்கல் அணியை வீழ்த்தி வல்வை 3ம் சுற்றுக்கு தகுதி





வல்வை.வி.கழகம்



உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் (08.01.2017) அன்று நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் அம்பாள் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டது.வெற்றிபெற்ற வீராங்கனைகளை படத்தில் காணலாம்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (09.01.2017) அன்று நடைபெற்ற 2 ஆவது சுற்றில் மைக்கல் அணியுடன் மோதிய வல்வை அணி 3.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வல்வை அணி சார்பாக பிரசாந் 2, நிரஞ்சன் 1 கோல்களை போட்டனர். ஆட்டநாயகனாக பிரசாந் தெரிவு செய்யப்பட்டார். வல்வை அணி முதல் போட்டியில் 2:1 என்ற கோல்கணக்கில் சென் சேவியரை வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## பிளாஸ்ரிக்...

தியசாலையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய அரச நிறுவனங்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நோயாளர்களை பார்வையிட வரும்பொது மக்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் வைத்தியசாலை வளாகத்தினுள் பொலித்தீன் கொண்டு வருவது தடைசெய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பைகளை (துணியால் செய்த) பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

உணவு கொண்டு வருவதற்கு **லன்ச் சீற** இற்குப் பதிலாக சாப்பாட்டு பெட்டிகளை (துருப்பிடிக்காத உலோக/உணவுத் தர பிளாஸ்ரிக்) வாழை இலை, வாழைமடல் போன்ற இயற்கையான சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத இயற்கையான பொருள்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வருவதை முடியுமான வரை தவிக்கவும். வைத்தியசாலையினால் சுத்தமான வடிகட்டிய குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள், பிளாஸ்ரிக் கோப்பைகள், குடிபானக் குழாய் போன்றவற்றின் பாவனையை முடியுமான வரை குறைத்து நீர் வடிகட்டிகள், மட்பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், செராமிக் கோப்பைகளை பாவிக்கவும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் எதிர்வரும் பெபரவரி 1ஆம் திகதி தொடக்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தும் வகையில் அடுத்த வாரம் தொடக்கம் பொதுமக்களது பொதிகள் யாவும் பரிசோதிக்கப்பட்டு அறிவுத்தப்படுவார்கள் என வைத்தியசாலைப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ரவிராஜ் கொலை...

யப்பட்டுள்ளது.

இதனை, படுகொல்லை செய்யப்பட்ட நடராஜா ரவிராஜின் மனைவியின் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் குறித்த மேனமுறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவிற்கான விசாரணைத் திகதி இதுவரை குறிக்கப்படவில்லை.

இது குறித்து சட்டத்தரணி சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

வழங்கிய தீர்ப்பிலுள்ள சட்டவிரோதமான தீர்வுகள் தொடர்பாக இந்த மேன்முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்து தீர்ப்பளிக்கும்போது மீள்விசாரணையொன்றை ஏற்படுத்துமாறு இதில் கோரியுள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அதிபர்களின்...

மேற்படி விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி என்ற தலைப்பில் பல விடயங்கள் வெளிவந்து கொண்டுள்ளன. அதிலே குறிப்பாக 05ஆம் திகதி வெளிவந்த கட்டுரையிலே இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபையில் பிரஸ்தாபிப்பீர்கள் என என்னை நோக்கி ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பொறுப்பு வாய்ந்த ஊடகத்திலிருந்து இந்த கோரிக்கை வந்த படியால் இந்த கடமை நிறைவேற்று அதிபர்கள் சம்பந்தமாகவும், அதிபர் தரம் மூன்று பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் தொடர்பாகவும் தெளிவு படுத்த வேண்டி இருக்கின்றது. இந்த மாகாண சபையில் கடந்த வருடம் மே மாதம் முதல் இந்த விடயம் பேசப்பட்டு வருகின்றது.

குறிப்பாக எந்த சந்தர்ப்பத்திலும் யாரையும் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் வடக்கு மாகாண சபை மேற கொள்ளவில்லை. குறிப்பாக இந்த விடயத்தை கல்வி மட்ட ஆலோசனை குழுக் கூட்டத்தில் ஆராய்ந்து சுமூகமாக தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை எமது உறுப்பினர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையில் இரு தரப்பிற்கும் பாதிப்பில்லாத வகையில் ஒரு தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்பதனையே இந்த சபை தீர்மானித்திருந்தது.

ஆகவே இந்த சபை நிச்சயமாக எந்த தரப்பிற்கும் ஆதரவாகவோ எதிராகவோ ஒரு தீர்மானத்தை இயற்றவில்லை என்பதனை தெளிவுபடுத்துகின்றது. இந்த விடயத்தை குறித்த பத்திரிகையின் கட்டுரைக்காக தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இந்த அவையின் உணர்வுகள் கருத்துக்கள் எவரையும் பாதிப்பதாக அமைந்ததில்லை என்பதனையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். (ந-4)

## பனைவள அபிவிருத்தி...

யம் பிரேரணையாக முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

வடக்கின் தனித்துவமான இயற்கை தாவரமாகவும், வடக்கில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவல்ல வளமாகவும் பனைமரங்கள் உள்ளன. எனினும் வடக்கின் அடையாளமாகவும், வடக்கின் சுற்றுசூழலில் காத்திரமான வகிபாகத்தை கொண்டதாகவும் விளங்குகின்ற பனைமரங்கள் அனுமதியின்றி சட்டவிரோதமாக பெருமளவு அழிக்கப்படுகின்றன.

நுனிக்குருத்து தொடக்கம் அடிவேர் வரை தனது சகல பாகங்களையும் பயனாக தரவல்ல கற்பகதருக்களான இப்பனை மரங்களில் இருந்து இதுவரையில் பொருளாதார ரீதியிலான உச்சப் பயன்பாடு பெறப்படவில்லை. இவற்றை கருத்தில் கொண்டு பனைமரங்களை அழிவிலிருந்து பாதுகாப்பது தொடர்பாகவும் பனைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதமாகவும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் செயற்பாடுகளையும்,

வினைத்திறனுடன் முன்னெடுக்கும் நோக்கில் நடப்பு 2017ஆம் ஆண்டினை வடகது மாகாண பனைவள அபிவிருத்தி ஆண்டு என பிரகடனம் செய்வது என இந்த சபை கோருகின்றது. என்ற தீர்மானத்தை விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் முன்மொழிந்தார். இதையடுத்து இந்த பிரேரணை எதிர்ப்பின்றி உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (செ-4)

## விமல் வீரவன்ஸ...

மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டதோடு கொழும்பு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றிலும் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போதே நீதவான் லங்கா ஜயரத்ன, இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் வீடமைப்புத்துறை அமைச்சராக பதவிவகித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு காணப்படுகிறது.

இந்த நிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச விசாரணையின் நிறைவில் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

விமல் வீரவன்ச கைது செய்யப்பட்டதை அறிந்த ஆதரவாளர்கள் பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் முன்பாக ஒன்றுதிரண்டு பெரும் அமளியில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் அமைதியின்மையை கட்டுப்படுத்த பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர்.

இதன் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை அதிகாரிகள் பொலிஸாரின் வாகனத்திற்கு அழைத்துச் செல்லும் போது அதற்கு அவரது ஆதரவாளர்களால் கடும இடையூறு விளைவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பொலிஸாரின் தலையீட்டில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதோடு விளக்கமறியல் உத்தரவும் அவருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பட்டிப் பொங்கலன்று...

சீ.வ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழர் திருநாளாக விளங்கும் தைப்பொங்கல் தினத்துக்கு மறுநாள் உழவுக்கு கை கொடுத்த இடபங்கள் மற்றும் பசுக்களுக்கு விழா எடுக்கும் பட்டிப்பொங்கல் விழா தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. பூரண நிறை உணவான தூய பசும்பாலையும், இரசாயன தீங்கில்லாத இயற்கை பசளையையும், உழவு தொழிலுக்கு, உதவிகளையும் நல்கும் இக் கால்நடை செல்வங்களுக்கு விழா எடுக்கும் அதேவேளை அவற்றை இறைச்சிக்காக கொல்வது முரணான செயற்பாடாக உள்ளது.

இதனை கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து இறைச்சிக்கடைகளும் ஆண்டு தோறும் பட்டிப்பொங்கல் தினத்தன்று மூடியிருத்தல் வேண்டும் என இச்சபை கோருகின்றது என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முன்மொழிந்தார். இந்த பிரேரணை அனைவரது ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (செ-4)

## கால வீணடிப்பின்றி...

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் நல்லிணக்க வாரம் நேற்று கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரியில் அதிபர் ராஜமணிபிள்ளை ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

இரண்டு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தற்பொழுது அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும். நாங்களும் அதனையே எதிர்பார்க்கின்றோம். சர்வதேசத்தின் மதிப்பை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

சமாதானத்தை ஏற்படுத்த இந்த நாட்டின் அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிட்டதாக நாம் கூற முடியாது. பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆட்சி மாற்றத்தின் காரணமாக ஆடசியாளர்கள் மத்தி யில ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு வித்தியாசத்தை நாங்கள் அவதானிக்கின்றோம்.

இந்த பிரச்சினைகளை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். தீர்க்க எத்தனிக்கின்றார்கள். பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படாவிட்டாலும் கூட அதற்கான எமது ஒத்துழைப்பை நாம் வழங்காமல் இருக்க முடியாது. ஏனென்றால் நாங்களும் இதில் ஒரு பங்காளிகள். எமக்கு இதில் முக்கிய ஒரு பங்கு இருக்கின்றது. அந்த பங்களிப்பை செய்ய நாம் பின்நிற்க கூடாது.

முக்கியமான ஒரு சில விடயங்கள் தொடர்பாக தாமதம் இல்லாமல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். காணாமல் போனோர் தொடர்பாக விரைவில் ஒரு முடிவு வர வேண்டும். ஆயிரக்கணக்கான குடும்பங்களும் தாய்மார்களும் நிர்க்கதியான நிலையில் இருக்கின்றார்கள். நீண்ட நாட்களாக இது தொடர்பாக பல போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக சில மாத ங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் ஒரு அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அதற்காக உருவாக்கப்பட்ட சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

எங்கள் மக்களுடைய நியாயமான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அந்த மக்களுடைய வாழ்க்கையில் ஒரு நிம்மதி ஏற்பட வேண்டும். ஒரு சமாதானம் ஏற்பட வேண்டும். அவர்களுடைய மனதில் ஒரு சாந்தி ஏற்பட வேண்டும். அவர்கள் நடந்த உண்மையை அறிய வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் காலத்தை வீணடிக்காது செயற்பட வேண்டும் என நான் கருதுகின்றேன்.

எமது மக்களுக்கு சொந்தமான காணிகள் இன்னும் முழுமையாக கொடுக்கப்படவில்லை. அவர்களின் விவசாய நிலங்கள் அவர்களுக்கு கையளிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த விடயங்களில் தற்பொழுது படிப்படியாக முன்னேற்றம் ஏற்படுகின்றது. ஆனால் இன்னும் விரைவுபடுத்தப்பட வேண்டும் என சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

## ஆசிரியர்களின் போராட்டத்தை....



இந்த நிலையில் தமக்குரிய தீர்வினை எழுத்துமூலம் தருமாறு கோரி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளாரின் அலுவலகத்தின் முன்பாக கவனயீர்ப்பினை மேற்கொண்டிருந்த போது மாலை 5 மணியளவில் செயலாளர் அலுவலகத்தை விட்டு வெளியேறுவதற்கு முயற்சித்துள்ளார்.

தமக்குரிய தீர்வினை தராது வெளியே போக வேண்டாம் எனக் கோரி ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் செயலாளருடைய காரையும் மறு பகுதியினர் செயலாளரையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது செயலாளருடைய காரை வழிமறித்த ஆசிரியர் ஒருவர் காயத்துக்குள்ளானார்.

இதனால் கோபமடைந்த ஆசிரியர்கள் கல்வி திணைக்கள முன்றலுக்கு சென்று மறியல் போராட்டத்தினை மேற்கொண்டனர். அதன் காரணமாக செயலாளர் பிறிதொரு வழியாக வெளியேறி வேறு ஒரு வாகனத்தின் மூலம் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதுடன் அப்பகுதியை விட்டு செல்லாமல் ஆசிரியர்கள் முற்றுகையிட்டு நின்றிருந்தனர். அச் சமயம் சம்பவ இடத்துக்கு வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வருகைதந்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடி, சுமுகமாக பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்ததுடன் இன்றைய தினம் நண்பகல் 1 மணியளவில் வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் குறித்த ஆசிரியர்களுக்கும் செயலாளருக்கும் இடையில் கலந்துரையாடலை ஏற்பாடு செய்து அதில் உரிய தீர்வினை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்தனர்.

இதனையடுத்து கவனயீர்ப்பில் ஈடுபட்ட ஆசிரியர்கள் அனைவரும் அவ்விடத்தில் இருந்து கலைந்து சென்றனர்.

முன்னதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் முற்பகல் வேளையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-7179)



## NEW SCIENCE HALL
### KANNATHIDDY - JAFFNA

**2017 A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கட்குரியது**

**தொழில்நுட்பவியல்**

துரித மீட்டல் வினா விடை வகுப்பு

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
திரு.R.சரவணன்

**பொறியியல் தொழில்நுட்பவியல்**
திரு.K.அருண்குமார்

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**
செல்வி S.பகீரதி

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்**
**விவசாயம்**

**ஆரம்பம் : 12.01.2017**
**Thursday 3.00pm**

(சி-7188)



## வாடகைக்கு

A9 வீதி நாவற்குழியில் சங்கன் நிறுவனத்திற்கு அருகாமையில் இரண்டு அறை, கோல், குசினி சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு :**
**077 771 1071**

(7462)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

SATISFACTION 100% GUARANTEED

**070 330 5500**
**021 221 5656**

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

**அண்ணா அன் கோ**
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம் (C-7128)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு வெளிக்கள உத்தியோகத்தர் (Installation work ) ஒருவர் தேவை.

**தொடர்பு :**
**075 667 6767**

(7463)



## உடனடி வேலை வாய்ப்பு
## V2 TRAVELS



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்



கொடுப்பனவு -5,000/= (பயிற்சியின் போது)
குறைந்தது 15,000/= (பயிற்சியின் பின்னர்)

தகுதி :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அடிப்படை கணனி அறிவு உள்ளவர்கள் யாரும் விண்ணப்பிக்கலாம்

49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம்.
(யாழ் பொது நூலகம் முன்னால்)

**0768226240**



## வேலைவாய்ப்பு

மகாவலிஅ/தி அமைச்சு-முகாமைத்துவ உதவியாளர், புகையிரதத் திணைக்களம், வடமத்திய மகாண ஆசிரியர் வெற்றிடம், ம.மா.வீதி அ/தி அதிகாரசபை, ஊவா மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர், மதுவரித் திணைக்களம் -போக்குவரத்து அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், கைத்தொழில் அமைச்சு-அபிவிருத்தி உதவியாளர், பாவனையாளர் அதிகார சபை-நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதி உட்பட அனைத்து அரசவேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு பற்றி அறிய

**கோலாசிற்றி** தொழில் வங்கி **021 320 2787**

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (7470)



## STUDY in UK & EUROPE

**ஐரோப்பிய நாடுகளில் கல்விகற்க**
**100% VISA உத்தரவாதம்**

150 இற்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்து சாதனை.

Apral/May Intake 2017
Admission Open Now

கடந்த(2016) வருடம் சென்ற மாணவர்களின் வீசாக்களினை நேரில் வந்து பார்வையிடலாம்.

மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் Europe Interview வகுப்புக்கள் நடைபெறுகின்றது. A/L 3 or 2 pass போதும்

City & Guilds Approved Centre (U.K)
iDP (Australia) Exam partner

திருமணம் முடித்து SPONSOR VISA இல் UK செல்பவர்களுக்கு IELTS (Life skills) EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க...

**WORLD EDUCATION CONSULTANCY**
A9 வீதி, சங்கத்தானை (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)
**0779265447, 0217200989**

(C-7167)


## மண்...

நேற்று நள்ளிரவு தொடககம் அமுலுக்குவரும் வகையில் இந்த விலைக்குறைப்பு இடம்பெறறுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)


## உயர்கல்விக்கான புலமைப்பரிசில்

CIMA-UK, CompEngineering(Networking/Web/Software)-USA, BIT_university of Colombo ஆகிய கற்கை நெறிகளிற்கு புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. புலமைப்பரிசிலானது மாணவர்களிற்கு பதிவுக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக்கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணங்களில் வழங்கப்படவுள்ளது. மேலும் இம்மாணவர்களிற்கு மேலதிகமாக Msoffice, English, Accounting Package ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது. கற்கை நெறிகளின் முதலாம் கட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யபட்டு சான்றிதழ்கள் உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும். திறமையினை வெளிப்படுத்தும் மாணவர்களிற்கு தொடர்ந்தும் புலமைப்பரிசில் வழங்கப்படும். இடவசதியினை கருதி தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தாம் விரும்பும் கற்கை நெறி, தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம் ClosingDate14Jan

(சி-7183)



## B.Sc, BA, B.Com
### காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (2017 மார்கழி பரீட்சைக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் கலை, வர்த்தகம், கணிதம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- BAல், வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், பொருளியல், சமூக விஞ்ஞானம், பொது நிர்வாகம், Journalisem & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பம் : 21.01.2017 (காலை 8 மணி)
- இப்பட்டங்கள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் இணைப் பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

குறிப்பு : - விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண் இருபாலாருக்கும்) பாதுகாப்பான தங்குமிட வசதி இலவசம்.

காமராசர் பல்கலைக்கழகம்
யாழ். இணைப்பாளர்
தொ.பே இல. : 021 222 8148,
021 568 9477, 077 846 9721

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(7180)


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா சறோசாதேவி (சறோ)



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சறோசாதேவி (சறோ) கடந்த 2017.01.07ஆம் திகதி சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரவணமுத்து - மரியபவளம் ஆகியோரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை - இராசம்மாவின் அன்பு மருமகளும் தங்கராசாவின் பாசமிகு மனைவியும். சசிகலாதேவி, சர்மிளாதேவி, நடேசலிங்கம், பவளராஜ், கருணவதி, சுந்தரலிங்கம், சயந்தினிதேவி, ரகுணாதேவி ஆகியோரின் சகோதரியும், கயல்விழி (லண்டன்), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்வநேசன் (லண்டன்), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திவிஷன், லதுஷன், பானுஷன், ஷான்வி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (2017.01.11) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியதம்பிரான் கோவிலடி
அச்சுவேலி.
075 040 5634

தகவல்:
க. தங்கராசா
(கணவர்)

(C-7165)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.